Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 6.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆவணி 26 | 11-09-94 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 205

## யாழ். இரத்தப் பரிசோதனை ஆய்வாளர்களின் அசிரத்தை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருவேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட குருதிப் பரிசோதனையின் போது வெவ்வேறு முடிவுகள் தெரிவிக்கப்பட்டதால் தமது குருதியின் இனம் எதுவென தெரியாது திண்டாடிய சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இது குறித்து தெரியவருவதாவது: தனியார் குருதிப் பரிசோதனை செய்யும் இடத்தில் நோயாளி ஒருவர் தனது குருதியை பரிசோதித்தபோது அது ''ஓ'' குறுப்பைச் சே! (5-ம் பக்கம் பார்க்க)

# அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து பிரபாகரனுக்கு சந்திரிகா கடிதம்!

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு சிறிலங்காவின் பிரதம மந்திரி சந்திரிகா குமாரணதுங்க கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் இக் கடிதம் சர்வதேச செஞ்சிலுவை ஊடாக அனுப்பிவைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இது குறித்து சிறிலங்கா வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் முக்கியத்துவம் கொடுத்தும் செய்தி வெளியிட்டு வந்தன. இது குறித்து அமைச்சர் அனுருத்த மேலும் தெரிவிக்கையில், ''இனப்பிரச்சினைக்கான நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கும் யுத்தநிறுத்தத்திற்கும் சம்மதமளித்து விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அனுப்பிய கடிதத்துக்கு பிரதமர் சந்திரிகா (5 ஆம் பக்கம் பார்க்க)

## இரவு நேர சிற்றூர்தி சேவை

நாளை முதல் கிளாலி - பூநகரி படகு சேவை நடைபெறும் நாட்களில் யாழ் - மூளாய், யாழ் - அச்சுவேலி, யாழ் - தெல்லிப்பளை, யாழ்- அளவெட்டி, யாழ் - புன்னாலைக்கட்டுவன் ஆகிய பாதைகளில் இரவு நேர சிற்றூர்தி சேவை நடைபெறவுள்ளதாக யாழ் மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையம் அறிவித்துள்ளது.

## பள்ளிக்குடா மோதலில் 6 புலிகள் வீரச்சாவு

கடந்த ஆறாந்திகதி மன்னார் பள்ளிக்குடாவில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் ஏற்பட்ட மோதலொன்றில் ஆறு விடுதலைப் புலிகள் போராளிகள்வீரச்சாவைத்தழுவிக்கொண்டனர்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட,

★ கப்டன் மௌனதேவன் (செபமாலை வின்சன், அரிப்பு மன்னார், தற் (5ஆம் பக்கம் பார்க்க)

## சிற்றூர்தி கட்டணங்கள் நேற்றுமுதல் குறைப்பு

யாழ் மாவட்டத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகள் நேற்று முதல் கட்டணக் குறைப்பினை மேற்கொண்டுள்ளதாக யாழ் மாவட்ட சிற்றூர்திசேவைச்சங்கங்களின் இணையம் அறிவித்துள்ளது.

இப் புதிய கட்டண விபரம் வருமாறு:

யாழ் - பருத்தித்துறை ரூபா 22, யாழ் - அச்சுவேலி ரூபா 15, யாழ் - புன்னா (6ஆம் பக்கம் பார்க்க)

## தட்டிவான் மோதியதில் வழிப்போக்கர் படுகாயம்

(தென்மராட்சி)

வீதியால் சென்ற தட்டிவான் முன்சக்கரம் திடீரென கழன்று மோதியதால் வீதியில் சைக்கிளில் சென்ற வழிப்

கடந்த 7-ம் திகதி காலை புத்தூர் சந்தி மீசாலைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மீசாலை வடக்கைச் சேர்ந்த பி வைரமுத்து

## பேச்சுவார்த்தை பயன்தராவிடின் யுத்தம் மூலம் தீர்வு காணப்படும்

### அமைச்சர் அனுருத்த ரத்வத்த கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர நடைபெறும் பேச்சுவார்த்தைகள் உரிய பயனை அளிக்காவிட்டால் யுத்தம் மூலமான ஓர் தீர்வு ஏற்படுத்தப்படும் என பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் நல்லெண்ணத்தை புரிந்து கொண்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் சமாதான (6 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள்

## ஜனாதிபதி தேர்தலில் சோமவன்ச போட்டி?

(கொழும்பு)

வரும் ஜனாதிபதித் தேர்தலில்ஜே. வி. பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க போட்டியிடவுள்ளதாக ''லங்காதீப'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஜே. வி.பியின் அரசியல் பிரிவான பிரஜாசீலி பெரமுனவுடன் இணைந்து சிறிலங்கா முற்போக்கு முன்னணியின் சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவ (5 ஆம் பக்கம் பார்க்க)

### தொலைபேசி ஒட்டுக்கேட்பு

## சட்டபூர்வ அரசாங்கத்தை கவிழ்க்க செய்யும் சதி

(கொழும்பு)

பிரதமர் மற்றும் அமைச்சர்களின் தொலைபேசிகள் ஒட்டுக்கேட்கப்படுவது சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட அரசாங்கத்தைக் கவிழ்க்க மேற்கொளளும் சதிகு ஒப்பான செயல் என சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க ஜனாதிபதி டி.பி விஜேதுங்கவிற்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் சேவை அமைக்க கல்வி அமைச்சு முடிவு

(கொழும்பு)

நாட்டிலுள்ள ஆசிரியர்களின் நலனை அபிவிருத்தி

லைகள் சம்பந்தமான மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்

வீதியால் சென்ற தட்டிவான் முன்சக்கரம் திடீரென கழன்று மோதியதால் வீதியில் சைக்கிளில் சென்ற வழிப்போக்கர் படுகாயம் அடைந்தார்.

புத்தூர் சந்தி மீசாலைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மீசாலை வடக்கைச் சேர்ந்த பி வைரமுத்து (வயது 49) என்பவர் படுகா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் பழிவாங்கலுக்கு எதிராகப் போராட்டம்

### ஐக்கிய தேசியக் கட்சி நடத்துமாம்

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல் காரணமாக இடமாற்றம் செய்யப்படும் ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் மற்றும் போராட்டங்களை நடத்தப்போவதாக கண்டி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி கூட்டத்தில் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்ட

( 6 ஆம் பக்கம் பார்க்க )

### பியகம சுதந்திர வர்த்தக வலய

## ஊழியர் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

பியகம சுதந்திர வர்த்தக வலயத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் தமது வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு நேற்று முதல் வேலைக்குத் திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

ஒரு மாதத்திற்கு மேலாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த செரமிக் நிறுவனம், அலிரெக்ஸ் ஆகிய நிறுவனங்களின் ஊழியர்களே வேலைக்கு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயத்தில் சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க நேரடியாக தலையிட்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

வித்துள்ளார்.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## சமாதான முயற்சிகள் யுத்தத்தைவிட கடினம்

### பி. பி. ஸி விமர்சனம்

(கொழும்பு)

சமாதானத் தீர்வுக்கான முயற்சிகள், யுத்தத்தை விடக் கடினமானதாக இருக்கும் என பி.பி.சி. சிங்கள சேவை தனது அரசியல் ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் தெரிவித்துள்ளது.

சென்ற பல வருட காலமாக யுத்தத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், சிறிலங்கா இராணுவம் தொடர்ந்தும் அரசியல் வாதிகளின் கைப்பொம்மையாக இருக்க விரும்பவில்லை இது எதிர்கால சமாதான நடவடிக்கைகளுக்கு

(5 ஆம் பக்கம் பார்க்க )

## இருதரப்பினரிடையே நம்பிக்கையீனம் முன்னைய அனுபவத்தால் ஏற்பட்டது

### விரிவுரையாளர் ஜயதேவ உயங்கொட

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்சினையை தீர்ப்பதற்கான சமாதான முயற்சிகள் அவதானமானதும், பொறுப்பானதுமான முறைகளில் முன்னெடுக்கப்பட வேண்டும் என கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஜயதேவ உயங்கொட பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு தெரிவித்துள்ளார்.

பி. பி, ஸி. சிங்கள சேவைக்கு பேட்டியொன்று வழங்குகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது, பிரச்சினை தீர்ப்தில் பெரும் தடைகளும் இருக்கின்றன இரு தரப்பினருக்கிடையிலான பரஸ்பரம் நம்பிக்கையீனம், முன்னைய அனுபவங்களின் அடிப்படையில் மறையாமல் இருக்கிறது.

முன்னைய அரசு, யுத்தத்தின் மூலம் பிரச்சினையை தீர்க்க போவதாக அறிவித்து அதன் மூலம் தமிழ் மக்களிடம் வெறுப்பை சம்பாதித்தது இதனைவிட பத்திரி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

கடந்த புதனன்று திருகோணமலை திரியாய் என்ற இடத்தில் விடுதலைப்புலிகள் சென்றுகொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினர் தாக்கியதில் விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை தங்கவேலன் (சித்திரவேல் பாபு, திருகோணமலை), வீரவேங்கை நீலவாணன் (செல்வராசா லோகேஸ்வரன், திருகோணமலை) ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

(கொழும்பு)

நாட்டிலுள்ள ஆசிரியர்களின் நலனை அபிவிருத்தி செய்ய ஆசிரியர் சேவை ஒன்றை ஆரம்பிக்ககல்வி உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

வெகு விரைவில் பாடசாலைகள் சம்பந்தமான மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படும் எனவும் கல்வித்திட்டங்கள், ஆசிரியர் பற்றாக்குறை பரீட்சை பெறுபேறுகள், பாடசாலைகளின் நிலைமை என்பன மதிப்பீடு செய்யப்

(5ஆம் பக்கம் பார்க்க)

## கலாகேசரி தம்பித்துரை இந்தியாவில் காலமானார்

தமிழீழத்தின் ஓவியம் மற்றும் சிற்பத்துறைகளில் குறிப்பிடத்தக்க பிரமுகரான கலாகேசரி ஆ. தம்பித்துரை இந்தியாவில் நேற்று முன்தினம் காலமானார். வைத்திய சிகிச்சைக்காக இந்தியாவுக்கு சென்றிருந்த இவர் அங்கு உயிர் துறக்க நேரிட்டது குறிப்பிடத்தக்கது. இவரது பூதவுடல் இந்தியாவில் தகனம் செய்யப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற சித்திரப்பாட வித்தியாதரிசியான இவர் குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் தலைவரும் ஆவார்.

ஈழத்தின் தலை சிறந்த

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## கப்பலில் வந்த சீனியில் 213மெ.தொன் குறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டிற்கு அண்மையில் கப்பலில் அனுப்பப்பட்ட சீனியில் சுமார் இருநூற்று பதின்மூன்று மெற்றிக் தொன் குறைவாக இருந்ததாக தற்போது எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

இச்சீனியின் கொழும்பு கொள்வனவு விலை சுமார் ஐம்பத்தி எட்டு லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. சீனி எடை குறைவு கண்டுபிடிக்கப்பட்டு இது தொடர்பாக கப்பல் கப்டன் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு எழுத்து மூலமாக முறைப்பாடு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இச்சீனி கொள்வனவு கொழும்பில்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## 5000பஸ்கள் கொள்வனவை உடன் நிறுத்தப் பணிப்பு

### அமைச்சர் சிறிமானி விடுத்தார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்த சுமார் ஐயாயிரம் பஸ்கள் தொடர்பாக உடனடியாக விசாரணை மேற்கொள்ளுமாறு போக்குவரத்து அமைச்சர் சிறிமானி அத்துலத்முதலி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அதிக விலைகொடுத்து இவ் பஸ் வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் இவை மக்கள் மயப்படுத்த நிறுவனங்களிடம் வங்கி உத்தரவாதப் பத்திரம் இல்லாமல் வழங்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டிய அவர் இதற்கான பணம் வங்கியில் இதுவரை வரவு வைக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை இவ் பஸ் வண்டி கொள்வனவு தொடர்பாக திறைசேரியில் இருந்து பணம் வழங்கப்பட்டதாகவும் மேலும் கொள்வனவு செய்ய ஆயத்தமாக இருந்த சுமார் ஐயாயிரம் பஸ் கொள்வனவு குறித்து நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறும் பணித்தார்.

## தென்னைகளைத் தறித்து கொழும்பிற்கு அனுப்பும் இராணுவம்

(மட்டக்களப்பு)

வாகரையிலுள்ள மாங்கேணி, இம்பந்தனவெளி, கதிரவெளி, வாகரை, கிருமிச்சை ஆகிய முகாம்களைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர், அப்பகுதிகளிலுள்ள பல பயன்தரு தென்னை மரங்களை வெட்டி தங்களது காவலரண்களைப் பலப்படுத்தி வருகின்றனர்.

அப்பகுதிகளிலுள்ள ஒவ்வொரு தென்னந்தோட்ட உரிமையாளரும் ஐம்பது தென்னைகள் வீதம் தரவேண்டும் என இவர்கள் பலவந்தப்படுத்தி வருகின்றனர்.

இம்மரங்கள் அனைத்தும் பட்டை உடைக்கப்பட்டு வாகனங்கள் மூலம் கொழும்புக்கு கொண்டுசெல்லப்படுகின்றன.

அப்பகுதி மக்கள் இராணுவத்தினரின் இக்கெடுபிடிகளுக்கு அஞ்சி மரங்களை வெட்டிக் கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

## வரி விளம்பரம்

### தேவை

மணலாறு கச்சான் அல்வா தயாரிப்பாளர்களான, ''பாரதி'' நிறுவனத்தாருக்கு எல்லா இனிப்பு வகைகளையும் யாழ் மாநகர சபை எல்லைக்குள் சைக்கிளில் சென்று விநியோகிப்பதற்கு ஒருவர் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் அல்லது கமிஷன் வழங்கப்படும்.

பாரதி நிறுவனம் 19 சம்பியன் லேன் கொக்குவில். (9350)

### இறைச்சிக்கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி புதன், சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்தி அறிவகம் அருகில்) (9306)

### இறைச்சிக் கோழி

வேண்டிய நிறைகளில் புறோயிலர், இறைச்சிச் சேவல், விறாத்துக்குஞ்சுகள், வளர்ப்புக்குகந்த குஞ்சுகள் பேடுகள், ஊர்க்கோழிகள், நல்லின அடைமுட்டை கிடைக்கும். யாழ்ப்பாணம் வீதி, உரும்பிராய்ச் சந்தி (9348)

### தவறிவிட்டது

பூட்டுக்காப்பு 1¾ பவுண் பாஷையூர் சந்தைக்கு கிழக்கே வயோதிப சாலைக்கும், இடையே தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்திலே ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (9362)

### மாற்றப்பட்டு விட்டது

1-9-94 அன்று காலை திருநெல்வேலி இராசையா மருந்து விற்பனை நிலையத்துக்கு முன்பாக லுமாலா சைக்கிள் மாறிக் கொண்டு செல்லப்பட்டுள்ளது எடுத்தவர் அச்சைக்கிளை தந்து உங்களுடைய சைக்கிளை கீழ்க்காணும் முகவரியில் பெறவும் பொ. இராதா கிருஷ்ணன் 361, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் (9359)

---

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்,

## தற்காலிக வேலை மேற்பார்வையாளர்

# பதவி வெற்றிடம்

யாழ்ப்பாண மாநகரசபை தற்காலிக அடிப்படையில் வேலைமேற்பார்வையாளர் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளது.

**தகைமைகள்**

01. கல்வி; க பொ. த. (சா த) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் குடிசார் தொழில்துறை சார்ந்த தேசிய தொழில் நுட்பச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்,

02. வயது: 18 தொடக்கம் 45 வரை

03: யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விருப்புவோர் மேற்குறித்த விபரங்களை உள்ளடக்கி தாமே தயாரித்த விண்ணப்பத்துடன் தமது தகைமைகளை நிரூபிக்கும் சான்றிதழ்களின் ஒளிப்படப் பிரதிகளையும் சேர்த்து 23-09-94-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ''ஆணையாளர் மாநகரசபை, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 09-09-1994

(சி-10313)

---

ஓ நு
புதிய மாற்றத்துக்கான
திறவுகோல்

# A/L 95

## DAY CLASS

கணித - உயிரியற்பிரிவு

ஆரம்பம்

23-09-1994

---

## விற்பனைக்கு உண்டு

அருச்சுனா வீதி [ஸ்ரான்லி வீதி] றயில்வே கடவைக்கு அருகாமையில் அமைந்துள்ள மூன்று கடைகளுடன் கூடிய மேல்மாடிக் கட்டிடம் விற்பனைக்கு உண்டு. தற்போது கடையில் இருப்பவர்களை எழுப்பித் தரப்படும்.

தொடர்பு: V S. கனகரத்தினம்
வீரபத்திரர் கோவில் ஒழுங்கை
கல்வியங்காடு

(9360)

---

## தவறிவிட்டது

முகாம் தேவைக்கு பயன்படுத்தவென கொண்டு செல்லப்பட்ட ஒரு குறிப்பிட்ட தொகைப்பணம் சங்கானைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து திவக மக்கள் நலன் காக்கும் கழகத்தில் கொண்டு வந்து தருமாறு அன்பாகக் கேட்டுள்ளனர். ஒப்படைப்பவர்கட்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் சங்கானை நீதவான் வளவு முகாம் தலைவரிடமும் தொடர்பு கொள்ளலாம்;

திவக மக்கள் நலன் காக்கும் கழகம்
65 புது வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்

(9358)

---

சட்டுடை மானிப்பாய்

## மேஜர்சுபாஸ் சனசமூக நிலையத்தின்

# 4-வது ஆண்டு நிறைவு விழா

காலம்: 14. 09. 94 புதன்கிழமை
இடா்: நிலைய மைதானம்

யாழ்மாவட்ட மட்டத்திலான 35 மைல் சைக்கிள் ஓட்டம் பங்கு கொள்ள விரும்பும் வீரர்கள் 13 09 94 முன்னர் நிலைய விளையாட்டுப் பிரிவு பொருளாளர் உ உதயகுமாரிடம் பதிவு செய்து கொள்ளவும்.

தகவல்
நா. உதயகுமார்

(9364)

---

## 31-ம் நாள் இதய அஞ்சலி

### செல்வி திலிபா தில்ரூபாகனகபவன்

பிறப்பு: 13-05-1976
இறப்பு: 12-08-1994

திலிபா! திவ்விய மானவளே
நிலைய மதில் நீ ஆற்றிய சேவை
எம் நெஞ்சமதில் நிலையாகவுள்ளது
நிலையத்தோடு நிலையாகி - சடுதியில்
தேவை உணர்ந்து சேவை ஆற்றி
நல் மனங்களில் திவ்வியமாகி
சேவையின் பெருமை உணர்த்திய - உன் ஆன்மா
இறை மலரடி சென்றதினால்
சாந்தி பெற வேண்டி நிற்கின்றோம்

நிர்வாகமும் அங்கத்தவர்களும்
பிரதேச இளைஞர் வளநிலையம்
வலிகாமம் வடக்கு

(9365)

---

## நினைவு கூருகின்றோம்...

### 11-09-1994

1988-ம் ஆண்டு இதேதினத்தில் மட்டு-மண்முனைத்துறையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**டட்லி** (க. கருணாகரன்-மட்டு)

1989-ம் ஆண்டு மட்டு-கஞ்சிக்குடிச்சாறுப் பகுதியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**கப்டன் குரூஸ்** (நல்லதம்பி பாக்கியராசா - கரடித்தோட்டம், காரைதிவு-அம்பாறை)

மட்டு- மண்முனைத்துறைப் பகுதியில் தேசவிரோதசக்திகள் மீது தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**2ம் லெப். அசோகன்** (ப ஜீவராசா - 40 கிராமம்-மட்டு)

1990-ம்ஆண்டு யாழ்-வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**தயான் - தயாளன்** (இராசையா இராஜேந்திர குமார்-257, மாணிக்கபுரம்-விசுவமடு)

யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**முரலி** (- - ஓட்டுமடம்-யாழ்ப்பாணம்)

மட்டு-மியாங்குளம் பகுதியில் எதிர்பாராதவிதமாக கண்ணிவெடி வெடித்ததில் எமைப்பிரிந்த,

**ஹெல்டன்** (- - பழுகாமம் - மட்டு)

யாழ்-கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**அமலதாஸ்** (கணேசராசா முரளிதரன்-மூத்ததம்பி ஒழுங்கை, மானிப்பாய்-யாழ்)

1991-ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

**கோபிநாத் - காண்டீபன்** (வேலுப்பிள்ளை புஸ்பராசா-உடுவில் தெற்கு-சுன்னாகம்)

1992-ம் ஆண்டு யாழ்-அளவெட்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**சிலம்பரசன் - லோலோ** (சின்னையா தயாபரன் -கோப்பாய்தெற்கு, இருபாலை-யாழ்)

சாவகச்சேரிப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்டவிபத்தொன்றில் எமைப்பிரிந்த,

**லெப். பூபால்** (வேலாயுதம் கிருஷ்ணகுமார் - அல்வாய் வடக்கு-பருத்தித்துறை)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப்படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10316)

வெட்டி, விளிம்பு அமைத்து வசதியான கைப்பிடியுடன் வண்ணம் தீட்டப்பெற்ற குடிநீர் கொள்கலனாகப் புனரமைக்கப்பெற்ற அரை பரல் விற்பனைக்குண்டு. ''மில்க்வைற்''
(சி- 10310)

---

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, நாமகள் ஒழுங்கையில் மூன்று பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு தரகர் தேவையில்லை தொடர்பு கொள்ளவும். ந அருணாசலம், நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு (9363)

---

UNIVERSITY OF JAFFNA
POST-GRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION

Post-graduate Diploma in Public Administration. Admission test will be held on 17-09-94, Viva Voce/Interview on 24-09-94. Please bring all certificates etc. Lectures start on October 01, 1994.

Registrar.
(சி-10311)

---

பாடசைப் பெறுபேறுகள்
வெளியாகும் வரை
கட்டணம் அறவிடப்பட மாட்டாது

★ 95 ஆவணியில் பரீட்சைக்குத் தோற்ற உள்ள, பாடசாலை செல்லாத மாணவர்கள் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

★ வகுப்புகள் திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் காலை 8-30 — 12-30 மணி வரை நடைபெறும்

★ முழுப்பாடத்திட்டமும் பூர்த்தியாக்கப்படும்.

★ 94 ஆவணியில் நடைபெற்ற பரீட்சை வினாத் தாள்கள் புள்ளியிடும் திட்டத்துடன் ஆரம்பவகுப்புகளில் ஆராயப்படும். நடைபெற்று முடிந்த பரீட்சையில் உங்கள் பெறுபேறுகளை முன்னரேயே தீர்மானிக்க இது உதவும்.

★ வகுப்புகள் யூனிவேர்சல் கல்வி நிறுவனத்திலும், நேச்சர் விஞ்ஞானக் கல்வி நிறுவனத்திலும் வெவ்வேறு பிரிவுகளாக நடைபெறும்.

★ எனினும், இரு பிரிவுகளுக்கான அனுமதிகளும் யூனிவேர்சல் கல்வி நிறுவனத்தில் மாத்திரமே 19-09-1994 வரை வழங்கப்படும்.

சமயோசிதமான
ஆசிரியத் தெரிவே
உங்களை
மீட்சிக்குரியதாக்கும்

| யூனிவேர்சல் | நேச்சர் |
|---|---|
| கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம். | ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். |

(சி-10318)


---

மயிலிட்டி கலைமகள் மகாவித்தியாலய வளர்ச்சி நிதிக்காக
பழைய மாணவர் சங்கம் நடாத்தும் நாடகம்

பருத்திநகர் சாண்டோ M. துரைரத்தினத்தின் மாணவன் சாண்டோ S. செல்வராசாவினால்
பயிற்றப்பட்ட பொலிகை ஒற்றுமை விளையாட்டுக்கழக வீரர்களின்

# வீரதீரச் செயல்கள்





இடம் :- இராமநாதன் கல்லூரி மைதானம், மருதனார்மடம்.
காலம் :- இன்றிரவு 7 மணி

(9366)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
[illegible]

# அரசியல்வாதிகள் தலையீட்டால் சீரழியும் சிறிலங்கா கிரிக்கெட்

இங்கிலாந்து - தெ. ஆபிரிக்க டெஸ்ட் தொடர் முடிவடைந்ததைத் தொடர்ந்து இரண்டு ஒரு நாள் போட்டிகளும் முடிவடைந்துவிட்டன. இலங்கையில் பாகிஸ்தான்-இலங்கை டெஸ்ட் தொடரும் ஐந்து ஒரு நாள் சர்வதேச மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளும் முடிவடைந்துள்ளன. இங்கிலாந்து - தெ. ஆபிரிக்க டெஸ்ட் தொடரில் முதலாவது ஆட்டத்தில் படுதோல்வி கண்ட இங்கிலாந்து இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தை சமமாக்கி மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் வென்று தொடரையே சமனாக்கிவிட்டது இதன் பின் நடைபெற்ற இரண்டு ஒருநாள் போட்டிகளிலும் தெ.ஆபிரிக்காவைத் தோற்கடித்து தொடரில் சம்பியனாக வந்துள்ளது அண்மைக் காலங்களில் இங்கிலாந்து தன்னைக் கட்டியெழுப்பிக் கொள்ள மிகவும் சிரமப்படுவதாக ஒரு கருத்து விமர்சகர்கள் மத்தியில் இருந்து வந்தது. மேலும் இங்கிலாந்து அணித்தலைவர் அதர்ட்டனும் முறைகேடாகப் பந்து பாவித்தல் எனும் அழுத்தத்தின் மத்தியில் தன் பணியை ஆற்றிக் கொண்டிருந்தார். இருந்தும் கூட இங்கிலாந்தினால் தம் சர்வதேச கிரிக்கெட் தரத்தையும் புகழையும் பேணிக்கொள்ள முடிந்திருக்கிறது.

## இங்கிலாந்தின் வெற்றியின் பின்னணியில்


கிரிக்கெட் விமர்சகர்களால் பெரும் பாராட்டுக்குள்ளாகியிருக்கும் இங்கிலாந்து அணியினால் இது எவ்வாறு சாத்தியமாயிற்றுஎன்பது பொருத்தமானதொரு வினாவாக அமையும். அணியில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி இச்சாதனையைப் புரிந்தார்கள் என்பதும் அல்ல, ஆனால் ஒரு சில மாற்றங்களைப் பொருத்தமான முறையில் ஏற்படுத்தி வெற்றிகள் கண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு அணியாக முழுமை பெற்றிருக்கும் அதேவேளையில் தனித்தவர்களாகவும் திடசித்தம், பொருத்தப்பாடு கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்

வாய்ப்புகளைத் தேடிக் கொடுத்திருக்கின்றார். இப்படியாகத் தனிநபர்கள் கூட தொடர்ச்சியாக தம் திறனைக் காட்டிக் கொண்டே வந்திருக்கிறார்கள்.

## அனுபவம் வாய்ந்த கூச்

இன்னொரு வகையில் அண்மைக் காலங்களில் பலம் இழந்ததாகக் கருதப்பட்ட இங்கிலாந்து, குறைந்தது நிறைந்த அனுபவம் வாய்ந்த ஒருவரையாவது அணியில் வைத்திருக்கவேண்டும் என்ற அடிப்படையில் கிரகம் கூச்சை அணியில் சேர்ந்திருந்தது. அவர் திறமையான ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் என்ற தகைமையுடன் அவரின் அனுபவமும் இங்கிலாந்து அணியில் அவரின் நிரந்தர இடத்துக்குக் காரணமாயிற்று.

இங்கிலாந்தின் இறுதி டெஸ்ட் ஆட்டத்தில் நீண்ட நாள் விளையாடாமல் இருந்த டெவன் மெல்கம் வேகப் பந்து வீச்சாளனாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இங்கிலாந்து - தெ. ஆபிரிக்



காவை வெற்றிகொண்டாக வேண்டும் என்றொரு நிலையில் அவரை அணியில் சேர்த்தது. அதேவேளை எதிர்வரும் அவுஸ்திரேலியசுற்றுப்பயணத்தில் இடப்பெற வேண்டுமாயின் அவரும் தன் திறமையை நிருபிக்க வேண்டியிருந்தது. அந்த ஆட்டத்தில் மெல்கம் 57 ஓட்டங்களுக்கு 9 இலக்குகளைச் சரித்து சாதனை படைத்தார். எவ்வளவுதூரம் அர்ப்பணிப்புடன் வீரர்கள் செயற்படுகிறார்கள் என்ப

தான் ஒருநாள், டெஸ்ட் தொடர்களை பார்த்தால் சிறிலங்காவிற்கு மிகவும் கசப்பானதாகவே அது அமைந்துவிட்டது. ஒருநாள் தொடரில் 4-1 என்றவாறு தோல்வி கண்ட சிறிலங்கா டெஸ்ட் தொடரில் 2-0 என்றவாறு தோல்வி கண்டது. இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் மோசமான தோல்வியைத் தழுவிக் கொண்டது. கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடை பெற்ற இரண்டாவது டெஸ்ட்டில் மூன்றாவது நாளிலேயே இனிங்சால் தோல்விகண்டது. இது சிறிலங்கா அணியின் நம்பகம் தகுதி சம்பந்தமான பல வினாக்களை எழுப்பியுள்ளது.

## தோல்விக்கு காரணம் என்ன?

இது தொடர்பில் தென் இலங்கைப் பத்திரிகைகள் அணித்தலைவர், தெரிவிக்குழு போன்றோர் மீது கடுமையான கணைகளை ஏவுகின்றன சிறிலங்கா கிரிக்கெட் அணியைச்சார்ந்தோர்விளையாட்டின் அடிப்படை புரியாதவர்கள் என்ற குற்றச்சாட்டுவேறு. இதில் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டியது பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர் வாசிம் அக்ரம், முகாமையாளர் இன்டகாப் ஆலம் ஆகியோரின் கருத்துக்களாகும் (அவர்களின் கருத்துக்கள் அவர்களைச் சர்ச்சைக்குள்ளாக்கவில்லை என்பதையும் குறிப்பிடவேண்டும்.)

வாசிம் மிகச் சிறந்த கருத்துக்களைக் கூறியுள்ளார் என தென் இலங்கை விமர்சகர்கள் அவரைப் பாராட்டுகிறார்கள். அஸ்கிரிய ஆடுகளத்தைப் பார்வையிட்டவுடனேயே நாங்கள் மூன்று வேகப் பந்து வீச்சாளர்களை சேர்த்துக் கொள்வதாகத் தீர்மானித்துவிட்டோம். புதியவரான வேகப் பந்து வீச்சாளர் கபீர்கானைச் சேர்த்துக் கொண்டு அனுபவம் வாய்ந்த றசாலை நீக்கிவிட்டோம். ஆனால் சிறிலங்கா இரண்டு வேகப் பந்து வீச்சாளர்களுடனேயே விளையாடி

ன்று அக்ரம் சுட்டிக்காட்டுகின்றார்.

## சமாளிக்கும் அர்ஜுனா

இதற்கிடையில் பொதுவாக அர்ஜுனாரணதுங்கா கருத்துக் கூறுகையில், பின்வரிசை ஆட்டக்காரர் எப்படியும் ஆடலாம். ஆனால் முன்வரிசை ஆட்டக்காரர் அவதானமாகவே ஆடவேண்டும். இவ்வேளையில் இலக்கை இழந்தால் அது துரதிர்ஷ்டமேஎன்று தம் தோல்வியை சமாளிக்க முயன்றிருக்கின்றார் ஹசான் திலகரட்ண ஆட்டமிழக்காமல் 83 ஓட்டங்களும்ருவன்கல்பகே 62 ஓட்டங்களும் கண்டிடெஸ்டின் இரண்டாவது இனிங்சில் எடுத்தமை பற்றிக்கருத்து கூறுகையிலேயே அர்ஜுனா இவ்வாறு கூறியுள்ளார் இது தொடர்பாகவிமர்சகர்களின்கணைகள் எவ்வாறு இருந்திருக்குமென்று கூறத் தேவையில்லை

## நடுவரின் கருத்து

இம்முறை டெஸ்ட்போட்டிகளின் நடுவர்களில் ஒருவர் சிம்பாப்வே நாட்டைச் சேர்ந்த றொபின்சன் இவர் நடுவராகவே நின்று இரண்டு டெஸ்ட்போட்டிகளில் இலங்கையின் வீழ்ச்சியை நேரடியாகவே பார்த்தவர். இதேவேளை வருகிறமாதம் இலங்கை சிம்பாப்வேக்கு 3 டெஸ்ட் போட்டிகளில் ஆடச்செல்லவிருக்கிறது. மேலும் டெஸ்ட் ஆடும் நாடுகளில் மிகவும்

**நிர்மலன்**

பலம் குறைந்த அணி சிம்பாப்வே என்பதும் குறிப்பிடத்தக்கது. றொபின்சன் கருத்துக் கூறுகையில், இம்முறை சிம்பாப்வே டெஸ்ட் வெற்றியைச்சுவைக்கும் சாத்தியக்கூறு உண்டென்று கூறிவிட்டார். இதனையும் விமர்சகர்கள் பற்றிப் பிடித்துக்கொண்டார்கள். ஆனால் றொபின்சன் சிறிலங்காவின் தாழ்நிலையை மனதில் கொண்டு இக்கருத்தைக் கூறவில்லையென்றும், இவ் வருடத்தில்

---

## கரபந்தாட்டம்

# பாரதி விளையாட்டுக் கழகம் கடும் போட்டியின் பின் சம்பியனானது

சிறுப்பிட்டி காமாட்சி அம்மன் விளையாட்டுக் கழகம், யாழ் மாவட்ட கரபந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன், யாழ் மாவட்ட ரீதியில் நடாத்தி வந்த 'செற் அப்' முறையிலான கரபந்தாட்டப் போட்டியினதும், 30 நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட 4வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் 'ஓவர் கேம்' முறையிலான கரபந்தாட்டப் போட்டியினதும், இறுதி ஆட்டங்கள் காமாட்சி அம்மன் விளையாட்டு மைதானத்தில், மின்னொளியில் பெரும் திரளான மக்கள் மத்தியில் வெகு சிறப்பாக நடைபெற்றன:

முதலில் இடம்பெற்ற செற் அப் முறையிலான ஆட்டத்தில், நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்தாடிய அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை கடும் போட்டியின் பின் 3:1 என்ற செற் கணக்கில் வென்று சாம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது:

ஆரம்ப முதல் வெகு விறுவிறுப்பாக இருந்த இவ்வாட்டத்தில் முதல் இரு செற்றுகளையும் 15:12, 15:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் பாரதி அணி தனதாக்கிக் கொண்டது மூன்றாவது செற் ஆட்டத்தின் போது விக்னேஸ்வரா அணி வெகு சிறப்பாக ஆடி 15:10 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது. நான்காவது ஆட்டம் ஆரம்பமானதும் விக்னேஸ்வரா அணி வெகுஉற்சாகமாக ஆடி புள்ளிகளைப் பெற்று முன்னணியில் நின்ற பொழுதிலும், நேரம் செல்லச்செல்ல பாரதி அணியினர் வெகுநிதானமாக ஆடி புள்ளிகளை கிரமமாக பெற்று அந்த செற்றையும் 15:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் அவர்களே பெற்றனர்.

இவ்வாட்டத்தில் சிறந்த சகலதுறை வீரனாக பாரதி அணி வீரன் செல்வன் ம. நவநீதன் மத்தியஸ்தர் குழுவினால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

**டி.ஏ.எம். குணசிங்கம்**

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற 4 வீரர்கள் பங்குபற்றும் ஓவர்கேம் முறையிலான கரபந்தாட்டத்தில் வல்வெட்டி குணசேகரா அணி அதனை எதிர்த்தாடிய சிறுப்பிட்டி ஜனசக்தி விளையாட்டுக்கழக அணியை வெகு இலகுவாக 72:46 என்ற புள்ளிகள் கணக்கில் வென்று சாம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது:

---

# சபாரட்ணம் வெற்றிக்கிண்ணத்தை ஜொனியன்ஸ் வெற்றி கொண்டது

## யாழ் நகரில் ஒரு மூன்றுநாள் ஆட்டம்

யாழ்ப்பாணக் கிரிக்கெட் பற்றி எழுதுவது ஒரு சுவையான அனுபவமாகவே இப்பொழுது மாறிவிட்டது. ஆடப்படுவது கூடுதலாக மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்கள் தானென்றாலும் - சூழ்நிலைக்கிணங்க - அவற்றில் ஒரு தரமும், வேகமும், கலகலப்பும் ரசிகர்கள் எதிர்பார்க்கும் பரபரப்பும் நிறைந்தே காணப்படும், இருந்தும் கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் ஒரு ஆதங்கம் இருந்து வந்தது. அதாவது இனிங்ஸ் ஆட்டம் எதுவும் ஆடப்படுவதில்லையே என்பதுதான் அது. அந்தக் குறையும் அண்மையில் தீர்ந்து விட்டது. இவ்வருடத்தில் நடைபெற்ற ஒரேயொரு மூன்று நாள் கிரிக்கெட் போட்டி யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடந்தேறியது,

மன் 36, நிமால் 28, பிரசாந்தன் 27 என்றவாறு ஓட்டங்கள் பெற்றார்கள். இதில் விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் சுதேசனாவார். யாழ். கிரிக்கெட் ரசிகர் மத்தியில் இவரைப் பற்றிய கணிப்பு எப்பொழுதுமே நிறைவானதாகவே இருந்து வருகிறது. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களையும் வகையறிந்து ஆடும் இவர் இம்மூன்றுநாள் போட்டியில் 103 ஓட்டங்களைப் பெற்றது மிகவும் பாராட்டுக்குரியதாகவே அமைகிறது முதல் நாளிலே அணி ஓட்டங்கள் கூடுதலாக இருப்பது வெற்றிவாய்ப்புக்கு வசதி என்பதை உணர்ந்தாற்போல சீரான வேகமொன்றுடன் ரண்களைச் சேர்த்து சதம் பெற்றார். இவர் அற்புதமானதொரு ஆட்டக்காரர் இவர். சென்றலைட்ஸ் நல்லதொரு

கதுஜித் 41, பிரபா 31, சதீஸ் 19 என்ற வகையில் ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டமையே. மதிய இடைவேளை வரும் போது சென்றலைட்ஸ் இரண்டு இலக்குகளை இழந்திருந்தனர். ஆனால் ஜொனியன்ஸ் அணியின் சிறப்பான பந்துவீச்சின்காரணமாகமதிய இடைவேளை, தேநீர் இடைவேளைக்குஇடையில் 6இலக்குகளை சென்றலைட்ஸ் இழக்க வேண்டியேற்பட்டது. இந்நிலையில் 8 / 141என்றவகையில் ஓட்ட எண்ணிக்கை காணப்பட்டது. மீண்டும் சென்றலைட்ஸ் துடுப்பெடுத்தாடும் படி செய்யும் வண்ணம் குறைந்த ஓட்டங்களில் எல்லா இலக்குகளையும் வீழ்த்த ஜொனியன்ஸ் முயன்றனர். இதில் நிரோஷன் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். அவர் பந்தை இலாகவமாக தூரத்தில் இருந்து எறிந்து

வர்களாகவும் இருக்கிறார்கள் உதாரணமாகப் தோர்ப் தொடர்ந்து தான் விளையாடிய ஆட்டங்களில் 70க்கு மேல் ஓட்டங்கள் பெற்றுக் கொண்டே வந்திருக்கின்றார். இதேபோன்று கிரகம் ஹக் ஒரு சதம் உட்பட ஒரு நாள் ஓட்டங்களிலும் ரண்களைக் குவித்திருக்கின்றார், இவர்கள் தம் பணி உணர்ந்து செயலாற்றியவர்கள்.

இதே போன்று பந்து வீச்சை எடுத்துக்கொண்டால் தொடராகவே டிபிரெய்டாஸ் இலக்குகளைப் பெற்றுக் கொண்டே வந்திருககின்றார். மேலும் ஒருநாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அதற்கேற்ற கிரிஸ் லூயிசை அணியில் சேர்த்து விளையாடியது அவர் பிரதானமான இலக்குகளைச் சரித்ததன் மூலம் இங்கிலாந்துக்கு வெற்றி

செயற்படுகிறார்கள் என்பதற்கு இவர் நல்ல உதாரணம்-

அவுஸ்திரேலியாவுடன் விளையாடும் டெஸ்ட்தொடர் கௌரவம் என்ற வகையிலும், பழமையானது என்ற வகையிலும் இங்கிலாந்திற்கு மிக முக்கியமானது. இந்த வகையில் இச்சுற்றுப் போட்டிக்கு இரண்டு மூத்த உறுப்பினர்கள் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் ஒருவர் கூச், மற்றையவர் மைக் கட்டிஸ் எனவே இங்கிலாந்து வீழ்ச்சியில் இருந்து ஒரு எழுச்சியை நோக்கிச் செல்ல ஆரம்பித்திருப்பது போலத் தெரிகின்றது.

### சிறிலங்காவிற்கு கசப்பான அனுபவம்

மறுபுறம் சிறிலங்கா-பாகிஸ்

ளார்களுடனேயே விளையாடியது மிகப் பெருந்தவறு என்று சுட்டிக்காட்டப்பட்டது. மட்டுமன்றி, இச்சிறுவிடயத்தை சிறிலங்கா அணிசாந்தவர்களால் ஏன் புரிந்து கொள்ள இயலவில்லை என்றும் சாகசமாக அக்ரம் ஒரு வினாவை எழுப்பினார்.

விமர்சகர்களும், அக்ரமும் கூட புதிய இளம் வேகப் பந்து வீச்சாளர்களை மிகவும் வேலைவாங்கி விட்டதாக குற்றம் சாட்டியுள்ளார்கள் புஸ்பகுமாரபற்றி அக்ரம் மிகச் சிறப்பான பாராட்டுகள் தெரிவித்திருக்கிறார். அதாவது அவர் எதிர் காலத்தில் சிறந்ததொரு பந்து வீச்சாளராக வருவார் என்றும், அவரது பந்து வீச்சுப் பாணியில் சிறியதொரு மாற்றத்தை மட்டும் ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். இது தொடர்பாக கருத்துக் கூறும் விமர்சகர்கள் இந்த நுட்பத்தைக் கூடக் கண்டு பிடிக்கும் தகைமை வாய்ந்தவர்கள் யாராவது சிறிலங்கா கிரிக்கெட் தொடர்பானவர்களில் இருக்கிறார்களா? என்று நையாண்டியாகக் கேட்கிறார்கள்.

### அக்ரமின் ஆதங்கம்

மேலும் அக்ரம் கருத்துக் கூறுகையில், தம்மை அர்ப்பணித்து விளையாடி தம் நாட்டுக்காகத் தோற்பதில் பெரும் கௌரவம் இருக்கிறது. ஆனால் அத்தன்மையை சிறிலங்கா வீரர்களிடம் காண இயலவில்லையே என்றும் ஆதங்கப்பட்டுள்ளார். சிறிலங்கா 71 ஓட்டங்களுக்கு முதல் இனிங்சில் ஆட்டமிழந்ததும், இரண்டாவது இனிங்சிலாவது நின்று ஆட முயற்சிக்காமையும் இவரது ஆதங்கத்துக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

அணித்தலைவர் இளம் வீரர்களுக்குத் தலைமை தாங்குபவர். சுமையைத்தான் ஏற்று முன்பதாகவே ஆடுகளத்துக்கு வந்து போராடி முன் மாதிரி காட்டியிருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்யாமல் நடந்து கொண்டது அணித்தலைவரின் பிழையெ

...யென்றும், இவ் வருடத்தில் | றியது,

சென்றலைட்ஸ் நல்லதொரு

அவர் பந்தை இலாகவமாக தூரத்தில் இருந்து எறிந்து இரண்டு பேரை ரண் அவுட் ஆக்கியது சிறப்பானது. இதன் காரணமாக சென்றலைட்சே தொடர்ந்தும் ஆட வேண்டிய நிலை ஏற்பட்டது. பந்து வீச்சில் சுதேசன் மூன்று இலக்குகளை வீழ்த்த, சூரியும் விமலனும் தலா இரண்டு இலக்குகளை வீழ்த்தினர்.

இரண்டாம் முறை சென்றலைட்ஸ் துடுப்பெடுத்தாட ஆரம்பித்ததும், நிலைத்து நிற்க முடியவில்லை; அன்றைய தினம் ஆட்டம் முடிவடையும் போது மூன்று இலக்கு இழுப்பிற்கு 55 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்கள். மூன்றாம் நாளான இறுதி நாளில் மிகச் சிறப்பாக துடுப்பெடுத்தாடினால் மட்டுமே தோல்வியில் இருந்து தப்பமுடியும் என்ற நிலை சென்றலைட்சுக்கு ஏற்பட்டது.

3-ம் நாள் ஆட்டம் ஆரம்பித்ததும் சென்றலைட்ஸ் இலக்குகள் ஒரு சீராக விழத் தொடங்கின. ஒரு கட்டத்தில் 5/80 என்ற நிலையில் சென்றலைட்ஸ் இருந்தார்கள். ரகுதாசும், றமேசனும் சோடி சேர்ந்த போது ஆட்டம் மிகவும் மந்த கதியில் செல்லத் தொடங்கியது. அவர்கள் தடுத்தாட முற்பட்டமை சரியானதே ஆனால் பெறக்கூடிய ஓட்டங்களையும் கூடப் பெறாமல் விட்டது ஏன் என்பது புரியவில்லை 6/104 என்ற நிலையில் ரகுதாஸ் ஆட்டமிழக்க பின்னர் ரமேசனும் பிரசாந்தனின் வேகப் பந்து வீச்சில் காயமடைந்து வெளியேறினார். ஒரு கட்டத்தில் சாந்திகரனும் சுரேசும் சோடி சேர்த்து 175 ஓட்டங்கள் வரை கொண்டு சென்ற போதும் சுரேஷ் ஆட்டமிழந்ததும் சென்றலைட்சின் மீதான அழுத்தம் இன்னும் அதிகரித்தது. சுரேசுக்குப் பதிலாக அரசரட்ணம் சாந்திகரனுடன் இணைந்து 33 ஓட்டங்களைப் பெற்றனர். ஆனால் இறுதியில் 215 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் சென்றலைட்ஸ் இழந்தனர். ஆனால் இவ்வள

(4-ம் பக்கம் பார்க்க)

# விளையாட்டு அரங்கு

பாகிஸ்தான் சென்றிருந்த சிம்பாவாப் அணி சராசரியாக நன்றாகச் செய்திருந்ததென்றும் அதை மனதிற் கொண்டே தான் அவ்விதம் கூறியதாகவும் கூறியுள்ளார். எவ்வகையில் பார்த்தாலும் சிறிலங்காவின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும், இலங்கை அணியும் நாலாபுறங்களிலும் இருந்தும் கடுமையான கணைத்தாக்குதல்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

### அரசியல் கலப்படமே காரணம்

இத்தோல்வியுடன் தொடர்பு படுத்தி, சிறிலங்காவின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, தெரிவுக்குழு எல்லாமே தூக்கி எறியப்படவேண்டும் என்றும் ஒரு கருத்துப் பலமாகஎதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. அரசியல் கலப்படமே சிறிலங்காவின் கிரிக்கெட் வீழ்ச்சிக்குக் காரணம் என்றும் வலுவாகக் குற்றம் சாட்டப்படுகின்றது இக்கருத்து எந்தளவீற்கு சரிபிழை என்று கூற இயலாது விட்டாலும் கூட, புதியஆட்சி மாற்றத்தில்சகலதுறையினரும் புதிய புதிய மாற்றங்களை எதிர் பார்ப்பதும் இயற்கைதான். எனினும் இன்னொன்றையும் மறுக்க இயலாது. கடந்த காலத்தில் இரண்டு பிரபல அரசியல்வாதிகள் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபைத் தலைவர் பதவிக்கு அல்லாடியதும் அது தொடர்பாக போட்டி

(4ஆம் பக்கம் பார்க்க)

சபாரட்ணம் வெற்றிக் கிண்ணத்துக்கான இம்மூன்று நாள் கிரிக்கெட் போட்டி நடைபெறுவது இது இரண்டாவது முறையாகும். 1992-ல் நடைபெற்ற முதல் போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. இம்முறை ஆவணி 19, 20, 21-ல் நடைபெற்ற இப்போட்டியில் ஜொனியன்ஸ் அணியினர் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டனர்.

ஆரம்பத்தில் பூவாதலையா போட்டுப் பார்த்ததில் அதிர்ஷ்டம் சென்றலைட்ஸ் பக்கமே இருந்தது, சென்றலைட்ஸ் அணித்தலைவர் ஜித் ஜொனியன்ஸ் தலைவர் பிரசாந்தனிடம் துடுப்பெடுத்தாடும்படி கேட்டுக் கொண்டார் முதல் நாள் ஆட்டம் ஜொனியன்ஸ் அணியினருக்குச் சார்பாக இருந்ததென்றே கூற வேண்டும். ஆட்டத்தின் தன்மைக்கிணங்க நல்லதொரு ஓட்ட எண்ணிக்கையை வளர்த்துக் கொள்ள ஜொனியன்ஸ் அணியினர் தவறவில்லை முதல்நாள் ஆட்ட முடிவின் போது மிக ஆரோக்கியமாக 8 இலக்கிழப்பிற்கு 302 ஓட்டங்களை ஜொனியன்ஸ் பெற்றிருந்தார்கள். துடுப்பாட்டக்காரர்கள் சராசரியாக எண்ணிக்கைகள் பெற்று தம் பணியைச் செவ்வனே நிறைவேற்றியிருந்தார்கள். ஆரம்பத்திலேயே ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் நிமாலும், பரிசித்தும் ஒருமணி நேரத்துக்குமேல் நின்று சிறந்த அடித்தளமொன்றைப் போட்டுக் கொடுத்தார்கள். சிவசுதன் 37, பீஷ்

பந்துத் தடுப்பு அணியெனினும் ஒரு சில பிடிகளை இவர்கள் தவற விட்டமை துரதிர்ஷ்டவசமானதாகும். ஜொனியன்ஸ் தரப்பில் ஏற்பட்ட ரண் அவுட் ஒன்றும் அநாவசியமானதாகும். இவ்வகையில்நரேஷ் ஆட்டம்இழந்தார் முதல் நாள் ஆட்டத்தில் சுதேசனும் சிவசுதனும் 63-ல் இருந்து ஓட்ட எண்ணிக்கையை 130 வரை பிரியாத சோடியாக கொண்டு சென்றமை ஜொனியன்சுக்கு வாய்ப்பாக அமைந்ததொரு விடயமும்கூட. இவ்வகையில் 302/8 என்றவாறு முதல் நாள் ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் நாள் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் 341 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தனர். பீஸ்மன் 48ஓட்டங்களையும் பெற்றிருந்தார். பந்து வீச்சில் ரகுதாஸ்3, சாந்திகரன் 2 அருணோதயம் 2, சண்முகலிங்கம் 1, சதீஸ் 1 என்றவாறு இலக்குகளைப் பெற்றுக் கொண்டார்கள். சாந்திகரனின் பந்து வீச்சு ரசிகர்களால் பாராட்டப்பட்டது அவருடைய சூழல்பந்து வீச்சு துடுப்பெடுத்தாடியவர்களை மிகக்கவனமாக விளையாடச் செய்தது. தான் வீசிய 18 ஓவர்களில் 44 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்திருந்தார்.

சென்றலைட்ஸ் அணியினர் மதிய போசனத்திற்கு முன்னமே துடுப்பெடுத்தாடத் தொடங்கினார்கள். இவர்களின் ஆட்டத்தில் குறிப்பிடத்தக்

## பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டி

கனடாவில் நடைபெற்ற பொது நலவாய விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்துள்ளன. பிரித்தானியாவின் ஆட்சியின் கீழ் இருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் பங்கு கொள்ளும் விளையாட்டு நிகழ்வென்ற வகையில் உலகின் மிகச்சிறந்த விளையாட்டு வீரர்களை இங்கு காண்பது அரிதாகவே இருக்கும் எனினும் இது சோபிக்காத ஒரு போட்டியென்றும் புறம் தள்ளிவிட முடியாது. இம்முறை நடைபெற்ற போட்டிகளில் இன்று எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் போதைப் பொருளும் நுழைந்து விட்டது. போதைப்பொருள் உட்கொண்ட காரணத்திற்காக ஆறு பேர் போட்டிகளில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இது ஒருபுறம் இருக்க கனடாவிற்கு சென்ற விளையாட்டு வீரர்கள் சிலர் தலைமறைவாகிவிட்டார்கள். இதில் சிறிலங்காவைச் சேர்ந்த ஒருவரும் அடங்கும் தட

களப் போட்டிகளில் முதன்மையான நிகழ்வாகக் கருதப்படுவது அதிவேகமான மனிதனை நிர்ணயிக்கும் 100 மீற்றர் ஓட்டமாகும். ஒலிம்பிக் சாம்பியனான பிரித்தானியாவைச் சேர்ந்த லின்போட் கிரிஸ்டி பொது நலவாய நாடுகளின் அதிவேக மனிதனாகத் தம்மை நிரூபித்துள்ளார் இம்முறை நடைபெற்ற இப்போட்டிகளில் இன்னொரு சிறப்பு 36 வருடங்களின் பின் தென் ஆபிரிக்கா கலந்து கொண்டமையாகும்.

பதக்கங்கள் வென்ற வரிசையில் அவுஸ்திரேலியா தங்கம், வெள்ளி. தாமிரம் என்ற ஒழுங்கில் 84-53-41 பெற்று முதலிடம் வகிக்கிறது. கனடா 38 - 41 - 49 என்ற வகையில் இரண்டாம் இடம் பெற, பிரித்தானியா 31-41-47 என்ற வகையில் மூன்றாம் இடம்பெறுகின்றது. தெ.ஆபிரிக்கா 2-4-5 என்றவாறும், இந்தியா 6-11-6 என்றவாறும், சிறிலங்கா 1-2-0 என்றவாறும் பலபடிகள் கீழே காணப்படுகின்றன.

# உத்தியோகபூர்வ வாகனம் ஒப்படைப்பதில் தாமதம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர்கள் பாவித்த உத்தியோக பூர்வமான வாகனங்களில்பெரும்பாலான வாகனங்கள் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள் சுமார் எழுநூறுக்கு மேற்பட்ட அரசாங்க வாகனங்களை பயன்படுத்தியதாகவும் ஆனால் இதில் சிறுதொகை மட்டுமே மீள வழங்கப்பட்டதாக தெரிவித்த அவர், ஏனைய வாகனங்களை மீளப் பெறுவதில் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிவரும் என தெரிவித்தார்-

இவ் வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பாக முன்னர் தீர்மானிக்கப்பட்ட போதும் இதுவரை ஏலவிற்பனை நடைபெறவில்லை என்றும் மிகவிரைவில்இவை ஏலத்தில் விற்பனை செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# விளக்கமறியலிலுள்ளோர் விபரம் திரட்டப்படுகிறது

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி சிறைகளிலும் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு பகுதி இளைஞர்களின் விபரங்களை சட்டமா அதிபர் திணைக்களம் திரட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது

புலிகளுக்கு உணவு வழங்கியமை, புலிகள் குறித்து தகவல் கொடுக்கத் தவறியமை வன்முறைக்கு உதவியவர்கள என்ற சிறிய குற்றச்சாட்டுக்கள் உள்ளவர்களை விடுதலை செய்யவே இவ் விபரங்கள் திரட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்கள் எவ்வளவு காலம் சிறையில் உளளார்கள் என்றவிபரம் திரட்டப்பட்டுவருவதாகவும் மேலும் தெரிய வருகிறது.

மேற்குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக இனிமேல் வழக்கு தொடரமாட்டாது எனக் கூறப்படுகிறது,

## 3-ம் ஆண்டுநினைவலைகள்



தாயின்மடியில்
1974-09-23

தாயகமண்ணில்
1991-09-11

### வீரவேங்கைகோபிநாத்-காண்டீபன்

வேலுப்பிள்ளை புஸ்பராசா (தேவன்)

4ஆம் வட்டாரம் நெடுந்தீவு

முல்லைதனில் முத்தாக நீ பிறந்தாய்
சாஸ்திரியாய் நீ பிறந்து
எட்டு இரண்டு ஆண்டு தனில் புலிவேடம் பூந்தாயே
மின்னல் வேகம் பூண்டு விரைந்தாயே அரனை
நோக்கி
ஆறு ஐந்து இராணுவத்தை அறவே அழித்து விட்டு
ஆயுதம் மீட்பதற்கு துணிந்தாயே காண்டீபா
ஏலாத காலம் உம் எல்லையில் போனிரே
பிரிந்திரே

# ஜனாதிபதி வேட்பாளராக காமினி பெயரை டி. பி. பிரேரித்தார்

(கொழும்பு)

சகல பிரஜைகளினதும் வாழ்க்கைதரத்தை அபிவிருத்தி செய்ய தான் அயராது உழைக்கவுள்ளதாக ஐ தே க ஜனாதிபதி வேட்பாளராக காமினிதிசா நாயக்கா தெரிவானபின் அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

ஜனாதிபதி டி.பி விஜேதுங்க காமினி திசாநாயக்காவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த அவரின் பெயரை பிரேரித்ததாகவும் ஐ தே கவின் மூத்த அங்கத்தவர்களைக் கொண்ட விசேடகுழு காமினியின் பெயரை ஏகமனதாக தெரிவு செய்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

## பயிற்சி வகுப்பு

செயற்கை முறை சினைப்படுத்தல் தொழில்நுட்பவியலாளர்களுக்கான சாதனா பயிற்சி வகுப்பு ஒன்று அண்மையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்டது.

ஒருவார காலமாக நடத்தப்பட்ட இப்பயிற்சி வகுப்பில் 09 பயிலுனர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

கால்நடை உற்பத்தி சுகாதார அலுவலரால் வழங்கப்பட்ட இப்பயிற்சியினைப் பெற்ற இவ் பயிலுனர்களை அவ்வப்பகுதி கால்நடை வைத்தியர் பிரிவுகளிலும் மேலும் பயிற்சிகள் பெற நியமிக்கப்பட்டுள்ளனர்.

## தென்னை நாற்று உற்பத்தி

சுமார் 1000 தென்னம் நாற்றுகளைக் கொண்ட நாற்று மேடை ஒன்றைகிராஞ்சிப் பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அமைத்துள்ளனர்.

தென்னையில் தன்னிறைவு அடையும் நோக்கத்தை அடிப்படையாக வைத்து மன்னார் மாவட்டத்தில் தென்னைச் செய்கையை அபிவிருத்தி செய்யும் நோக்கின் முன்னோடி நடவடிக்கையாகவே கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந் நாற்றுக்கள் உற்பத்திசெய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட நாற்றுக்களை பொது மக்களுக்கு நியாய விலைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது

## ரோகணாவின் மைத்துனர் ஜனாதிபதி தேர்தலில்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பி சார்பாக, அதன் முன்னாள் தலைவர் ரோஹண விஜேவீரவின் மைத்துனரான டாக்டர் சுபாஷ் பெர்ணாண்டோ போட்டியிடவுள்ளதாக, தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் பெர்ணாண்டோ, லண்டன் ஜே.வி பி கிளையின் தலைவராவார் தற்போது இவர் மிடில்செக்ஸில் வசித்து வருகிறார்.

## ஆசிரியசேவை துரிதமாக்க பிரதமர் பணிப்பு

(கொழும்பு)

ஆசிரியர் சேவையை துரிதமாக உருவாக்குமாறு பிரதமர் சந்திரிகா தம்மைப் பணித்துள்ளதாக கல்வி உயர்கல்வியமைச்சர் ரிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார். இது சம்பந்தமான முடிவை விரைவில் அமைச்சரவை எடுக்கவுள்ளது.

தேசிய பாடசாலைகள் அதிபர்கள் கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றபோது அமைச்சர் அங்கு உரையாற்றினார். ஆசிரியசேவை மூலம் பதவி உயர்வு சம்பள அதிகரிப்பு என்ற நன்மைகள் கிடைக்கும் என்று அமைச்சர் அங்கு சுட்டிக்காட்டினார்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின்

## இரண்டாம் கட்ட திட்டம் மாவட்ட மட்டங்களில்

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு இரண்டாம் கட்ட அவசர புனர்வாழ்வுத் திட்டத்தை மாவட்ட மட்டங்களில் அமுலாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச அபிவிருத்திக் கழகம் ஆகியவற்றின் உதவித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட முதலாம் கட்ட அவசர புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டம் கடந்த ஏழாம் மாதத்துடன் நிறைவடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதலாமாண்டு நினைவு



தோற்றம்
1942-11-05

சிவபதம்
1993-09-11

## அதிபர் வெற்றிடம்

சாவகச்சேரி கல்விக் கோட்டத்திலுள்ள யாழ். டிறிபேர்க் கல்லூரியின் அதிபர் பதவி 1994 - 07 - 08-ம் திகதி தொடக்கம் வெற்றிடமாக வுள்ளது.

இப்பதவிக்கு யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களம் வலயம் 1இன் நிருவாகத்திற்குட்பட்ட இ. க. நி சே. வகுப்பு 111 இலங்கை அதிபர் சேவையின் தரம் 1, தரம் 11 என்பவற்றிலுள்ள ...

# உதை பந்தாட்ட சம்மேளன விதிமுறைகள்

உதைபந்தாட்டத்தில் 17 விதிகள் உள்ளன. அவைகள் யாவும் நிரந்தரமானவை அல்ல. உலக உதைபந்தாட்ட சம்மேளனம் அவ்வப்போது காலத்திற்கேற்ப மாற்றங்களும், திருத்தங்களும் மேற்கொள்வது வழமை, இவ்வழக்கத்திற்கு அமைய 1993-ம் ஆண்டு உலக உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் பின்வருமாறு

விதி 4 விளையாட்டு வீரர்களின் உபகரணங்கள்

I (A) விளையாட்டு வீரர்கள் கட்டாயமாக ஒரே சீரான மேலங்கி அல்லது சேட் காற்சட்டை, காலுறை கால் பாதுகாப்பு (SHIN GUARD) காலணி அணிந்திருக்க வேண்டும். (முன்பு கால்பாதுகாப்பு அணியத்தான் வேண்டும் என்ற கட்டாயம் இருக்கவில்லை)

'B' ஒரு வீரன் இன்னொரு வீரனுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய எதனையும் அணிந்திருக்கக் கூடாது.

II கால் பாதுகாப்பானது முற்றுமுழுதாக கால் உறையால் மறைக்கப்பட்டிருத்தல் அவசியம்.

III கோல் காப்பு வீரன் ஏனைய இரு அணி வீரர்களினதும் மத்தியஸ்தர்களினதும் மேலங்கியில் இருந்து வேறுபடத் தக்க நிறத்தில் உடை அணிந்திருத்தல் வேண்டும்.

மேல் கூறப்பட்ட தவறை வீரனில் மத்தியஸ்தர் அவதானித்ததும் அத்தவறை திருத்துமாறு அவ்வீரன் மத்தியஸ்தரால் அறிவுறுத்தப்படுவார். மேற்கூறிய தவறுக்காக மத்தியஸ்தர் உடனடியாக ஆட்டத்தை இடைநிறுத்த வேண்டியதில்லை. தவறை திருத்துவதற்காக அனுப்பப்பட்ட வீரன் மத்தியஸ்தரை திருப்திப்படுத்திய பின்னரே விளையாட அனுமதிக்கப்படுவார். இவ்விதம் வெளியே அனுப்பப்பட்ட வீரர் ஆட்டம் தற்காலிகமாக நிறுத்தப்படும் வேளையில்தான் உதவி மத்தியஸ்தரின் அனுமதியுடன் மைதானத்தில் நுழையலாம்

விதி 5: மத்தியஸ்தர்: பயிற்றுனர்:

போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது 4-வது உத்தியோகத்தர், சர்வதேச உதைபந்தாட்டச் சபையால் (International F A. Board) கொடுக்கப்பட்ட கடமைகளைச் செய்வார் (இந்த உத்தியோகஸ்தர் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது)

போட்டி நடைபெற்றுக் ...

பிழை நிலையில் (Off Side) நிற்பதற்காக மத்தியஸ்தரால் ஆட்டம் நிறுத்தப்பட்டால், அக் கோல்பரப்பில் எந்த இடத்திலும் பந்தை வைத்து அடித்து ஆட்டத்தை மீண்டும் தொடரலாம். (முன்பு வீரன் பிழை நிலையில் நின்ற இடத்திலேயே பந்தை வைத்து அடிக்க வேண்டும்.)

விதி 12 தவறான ஆட்டமும் தவறான நடத்தையும்:

I கோல் காப்பாளர் பந்தை பிடித்த பின்னர், நான்காவது காலடி வைக்கும் போது அல்லது அதற்கு முன்னர் பந்தை விளையாடுவதற்காகச் செலுத்தினால் தமது எதிரணி வீரரின் காலில்பட்டால் அன்றி அல்லது தண்டனைப் பரப்பிற்கு வெளியே தமது அணி வீரரின் காலில் பட்டாலன்றி அல்லது விளையாடப்பட்டாலன்றிக் கையால் மீண்டும் பந்தை பிடிக்க முடியாது அப்படிப்பிடித்தால் கோல் காப்பாளருக்கு எதிராக நேரில் உதை (indirecit-kick) கொடுக்கப்படும்.

ii தமது அணி வீரரால் வேண்டுமென்றே கோல் காப்பாளரிடம் தட்டிக்கொடுக்கப்பட்ட பந்தை கோல்காப்பாளர் (புதிய விதிகளின்படி) கையால் தொட முடியாது அப்படித் தொட்டால் தண்டனையாக எதிர்அணியினருக்கு நேரில் உதை அடிக்க கொடுக்கப்படும்.

கோல் காப்பாளர் பந்தைப் பிடித்தபின் தமது அணிக்கு ஒரு நியாயமற்ற சாதகமான நிலையை ஏற்படுத்துவதற்காகப் பந்தை வைத்துக் கொண்டு நேரத்தைக் கடத்துகிறார் என்று மத்தியஸ்தர் கருதினால் அவருக்கு எதிராக உதை கொடுக்கப்படும்:

iii ஒரு வீரர் தமது தலையால் அல்லது நெஞ்சினால் அல்லது முழங்காலால் பந்தை தமது கோல் காப்பாளருக்கு தட்டிக் கொடுக்கலாம், ஆனால் விதியை ஏமாற்றும் நோக்கோடு அவர் செயல்படுவதாக மத்தியஸ்தர் கருதினால் சிறுமகன் செயல் புரிந்ததாக அவரை எச்சரிக்கை செய்து மஞ்சள் அட்டை காட்டுவதுடன் நேரில் உதையும் கொடுக்கப்படும்.

டி. ஏ. எம். குணசிங்கம்

iv முதலில் எச்சரிக்கை செய்யப்பட்டு மத்தியஸ்தரினால் மஞ்சள் அட்டை காட்டப் பெற்றவீரர் மீண்டும் எச்சரிக்கை செய்யப்பட்டு மஞ்சள் அட்டை காட்டப்பெற்றால், ...

ஆயுதம் [illegible]
ஏலாத காலம் உம் எல்லையில் போனிரே
பிரிந்தீரே

11-09-1994 இன்று இவரது இல்லத்திற்கு வருகை தரும்படி அனைத்து போராளிகளையும் உற்றார், உறவினர்களையும், நண்பர்களையும் அழைக்கின்றோம்.

37A, டச்சுவீதி,
உடுவில். (9336)

உம் நினைவில் வாடும்
குடும்பத்தினர்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மழலையாக
30. 08. 1975

மாவீரனாக
11. 09. 1992

### லெப். பூபால்
### வேலாயுதம் கிருஸ்ணகுமார் (ரமேஸ்)

காவிய ஏட்டிலே பூவாய் மலர்ந்தாய்
பூபால் என்ற புனைப் பெயரைக் குருதியால்
பொறித்தாய்
கதி கலங்கி நாம் நிற்க விடுதலைப்
பாதையில் வீறுடன் நடந்தாய்
வந்த தடைகளை பொடிபொடியாக்கியே - நீ
வென்றாய் இன்று
காற்றாய் கலந்து தமிழ் மக்கள் மூச்சில் நிறைந்தாய்

என்றும் உன் பிரிவால் துயருறும்,

கம்பிளி காப்பான்
அல்லாய் வடமத்தி

அப்பா, அம்மா
தம்பிமார்
தங்கை, மைத்துனன்
உறவினர்கள்

(9345)

1993-09-11



திருமதி சிவஞானம் பத்மாவதி
திதி: ஆவணி அபரபக்கதசமி
தங்களின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கிறோம்.

மகன்- சிவசீலன்
மற்றும்,
த. வே. தியாகராசா
குடும்பத்தினர்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி

(9349)

1-ம் ஆண்டு 18-ம் மாத 1-ம் ஆண்டு

## நினைவஞ்சலி







| மகாலிங்கம் | மாணிக்கம் | மகாலிங்கம் |
|---|---|---|
| கமலாதேவி | மகாலிங்கம் | வாசுகி |

இவர்களின் 18-ம் மாதமும், 1-ம் ஆண்டு நினைவஞ்சலியும் இன்று 11-09-94 ஞாயிற்றுக்கிழமை எமது மயிலியதனை இல்லத்தில் நடைபெற உள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பு இல்லை
நன்றி

-குடும்பத்தினர்

மயிலியதனை,
தொண்டமானாறு. [9323]

இலங்கை அதிபர் சேவையின் தரம் 1, தரம் 11 என்பவற்றிலுள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாதிரிப் படிவத்திற்கிணங்கத்தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1994-09-30 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ பிரதிக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் வலயம் 1 கல்விப் பணிப்பாளருக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மாதிரிப் படிவத்தை யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களம் வலயம் 1க்குட்பட்ட கோட்டக் கல்வி அலுவலகங்களில் பார்வையிடலாம்.

[illegible] தக்கது)

போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது பயிற்றுனர் அவருக்கு என ஒதுக்கப்பட்ட இடத்தில் இருந்து தமது அணியினருக்கு அறிவுறுத்தல் கொடுக்கலாம் [முன்பு இது அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை]

**விதி 11 பிழை நிலை**

ஒரு வீரர் தமது எதிர் அணியினரின் கோல் பரப்பினுள் [illegible]க்கை செய்யப்பட்டு மஞ்சள் அட்டை காட்டப்பெற்றால், இரண்டாவது [illegible]டப்பட்ட மஞ்சள் அட்டை சிவப்பு அட்டைக்கு சமமாகும்: அதாவது அவ்வீரர் வெளியேற்றப்படுவார் (முன்பு ஒரு வீரருக்கு எத்தனை பயணமும் மஞ்சள் அட்டை காட்டலாம் மஞ்சள் அட்டை எத்தனை சேர்ந்தாலும் ஒரு சிவப்பு அட்டைக்கு சமமாகாது)

## அரசியல்

கள் ஏற்பட்டதையும் ரசிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள் றொமேஸ்களுவித்தாரன தனி நபர் ஒருவரைத் திருப்திப் படுத்த அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் இவராலேயே இறுதி இரண்டு ஒருநாள் ஆட்டங்களில் சிறிலங்கா தோல்வி கண்டதாகவும் வன்மையாக விமர்சகர்கள் குற்றம் சுமத்துகிறார்கள்.

அடிமட்ட மாற்றங்கள் தேவை

இறுதியாக நோக்குமிடத்து ஒன்று துலாம்பரமாகத் தெரிகின்றது சிறிலங்கா கிரிக்கெட் ஆட்டத்தில் சோபிக்க வேண்டுமாயின் பல்வேறு அடிக்கட்டுமான மாற்றங்கள் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். நீண்ட காலத் திட்டமிடலின் அடிப்படையிலேயே படிப்படியாக சிறிலங்கா அணியை பலம் பொருந்தியதாக மாற்ற முடியும். அதோடு ஒரு சில மாவட்டங்களில் இருந்து மட்டும் வீரர்களைத் தெரிந்து சர்வதேச கிரிக்கெட் ஆடினால் இந்நிலை தான் தொடரும். கிரிக்கெட்டும் நியாயமான முறையில் பரவலாக்கம் செய்யப்பட வேண்டும். எல்லோருக்கும் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். எல்லாப் பகுதிகளிலும் கிரிக்கெட்டை வளர்க்க வேண்டும். இப்படியான ஆரம்பங்களே முடிவில் நியாயபூர்வமான பலனைத் தரும்.

## சபாரட்ணம்

விற்கு மத்தியிலும் சாந்திகரன் மறுபுறத்தில் ஜொனியன்ஸ் பந்து வீச்சுக்கு ஈடுகொடுத்து நின்று ஆட்டமிழக்காது 53 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். அழுத்தத்தின் மத்தியிலும் நிதானம் இழக்காது நின்றாடிய சாந்திகரனின் விளையாட்டு அற்புதமானதாகும். அவர் இந்த மூன்று நாள் ஆட்டத்தில் ஒரு பூரண வீரன் என்று நிரூபித்தார். ஜொனியன்ஸ் சார்பில் பிரசாந்தனும், காண்டீபனும் தலா 3 இலக்குகள் பெற்றார்கள். இறுதி இலக்குகள் இரண்டையும் சூரி கைப்பற்றியமையை இங்கு குறிப்பிடுதல் பொருத்தம்; ஏனெனில் வெற்றி வாய்ப்பில் எவ்வித சந்தேகமும் ஏற்படாத வண்ணம் தடை இலக்கு இரண்டையும் சூரி மிகச்சாதுரியமாக போல்ட் முறையில் வீழ்த்தி விட்டார். சூரியின் அனுபவ வெளிப்பாடு இங்கு நன்றாகத் தெரிந்தது.

வெற்றி வாய்ப்புக்கு 48 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸ் ஆட்டத்தை ஆரம்பித்த ஜொனியன்ஸ் 3 இலக்குகளை இழந்து தேவையான எண்ணிக்கையைப் பெற்று 7 இலக்குகளால் வெற்றி பெற்றனர். இந்த வெற்றி ஜொனியன்சுக்கு மிகப் பழமையான நினைவாக நீண்டகாலம் இருக்கும்.

### சிந்தனைக்கு..

பீரங்கிகள் சூழ்ந்த சாலையில் சமாதானம் என்ற தேர்முன்னோக்கி ஓட முடியாது.

- லோய்ட் ஜோர்ஜ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 11-09-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால்பெட்டி எண்- 05

## யுத்த நிறுத்தத்தின் அவசிய தேவை

கடந்த வாரம் வடக்கில், பாரிய தாக்குதல் ஒன்றிற்கு சிறிலங்கா இராணுவம் திட்டமிட்டிருந்ததென்ற பி.பி.சியின் தகவலானது ஒருவகையில் ஆச்சரியமளிக்கக் கூடிய தொன்று தான். ஆனாலும் யுத்தநிறுத்தம் ஒன்று அமுலாக்கப்படாத பட்சத்தில், இராணுவம் பாரிய தாக்குதலுக்குதிட்டமிட்டமையானது புதுமையானதொன்றல்லவாயினும், இன்று நிலவும் அரசியற் சூழ் நிலையைப் பொறுத்து இது ஆச்சரியமளிக்கும் விடயமே ஆகும்.

ஏனெனில், மூன்று வாரங்களுக்கு முன்னர் பதவி ஏற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகக் கூறிக்கொள்ளும் நிலையில் இராணுவத்தின் தாக்குதலுக்கான திட்டமானது பல கேள்விகளை எழுப்புவது நியாயமானதே.

யுத்த நிறுத்தம் ஏற்படாது சமாதான முயற்சிகள் நடைபெறும் பட்சத்தில், ஆயுத பாணிகளான இருதரப்பிற்கும் இடையில், சிறு சிறு சம்பவங்கள் எதிர்பாராமல் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகவும் இருக்கலாம். ஆனால் பாரிய தாக்குதல் ஒன்றிற்கு திட்டமிடுவது இராணுவத்தின் முரண்பாடான சிந்தனையையே காட்டுகின்றது. இதனை சமாதான முயற்சிக்கு இராணுவம் பச்சைக் கொடி காட்டவில்லை என்பதன் வெளிப்பாடாகவே கொள்ள வேண்டியுள்ளது.

ஏற்கனவே இராணுவத்தரப்புடன் அரசாங்கம் பேச்சுக்களை நடத்தியிருப்பதும், முக்கிய விடயங்களில் இராணுவம் விட்டுக்கொடுப்புக்கள் எதையும் செய்வதற்குத் தயாராக இல்லை என்றே தகவல்கள் தெரிவிக்கின்றன. அதிலும் குறிப்பாக, யுத்த நிறுத்தம் செய்தல் இன்றைய நிலைகளில் இருந்து பின்வாங்குதல் என்பவற்றிற்கு இராணுவம் ஒத்துழைப்பு வழங்க முடியாது என தெளிவாகக் கூறிவிட்டதாகவே அறிய முடிகின்றது.

இவ்வாறானதொரு சூழ் நிலையிலேயே இனப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கான பல முயற்

# இலங்கையுடனான உறவை புதுப்பிப்பதில் இந்தியதூதுவர் வர்மாவின் விஜயம் உதவியது

இலங்கையுடனான தனது சினேகபூர்வ உறவை மேலும் பலப்படுத்துவதற்கான முயற்சியை இந்தியா மேற்கொண்டு வருகின்றது. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா 'சார்க்' அமைப்பின் தலைவராக இருந்த போது இந்தியாவுக்கு விஜயம் செய்தார். அன்று முதல் இருநாடுகளுக்கும் இடையேயான உறவு படிப்படியாக வளர்ச்சியடைய ஆரம்பித்தது அத்துடன் ஜனாதிபதி பிரேமதாசா இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவுடனும் பிரத்தியேக உறவுகளை ஏற்படுத்திக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் புதிய பிரதம மந்திரி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கவை சந்திப்பதற்காக ராவ் தனது முக்கிய செயலாளர்களில் ஒருவரான ஏ. என் வர்மாவை இலங்கைக்கு அனுப்பி வைத்தார் ராவ் கொடுத்து விட்ட தனிப்பட்ட கடிதமொன்றையும் அவர் புதிய பிரதமரிடம் கையளித்தார். பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் முக்கியமாக இலங்கையுடன் இந்தியா கொண்டிருக்கும் உறவையே வர்மாவின் இலங்கை விஜயம் எடுத்துக் காட்டுகிறது.

### இந்தியாவின் ஆதரவு யாருக்கு?

இதேவேளை இந்திய அரசாங்கமானது ஐக்கிய தேசியக் கட்சியை விட பொதுஜன ஐக்கிய முன்னணியை வெகுவாக ஆதரிக்கின்றது என மேற்கு நாட்டு இராஜதந்திரிகளும், அரசியல் அவதானிகளும் கருதுகின்றனர். ஆனால் இவ் விடயத்தில் நாம் நடுநிலை வகிப்பதை இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் தெளிவுபடுத்தியுள்ளது. அத்துடன் இருகட்சிகளில் எக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அக்கட்சியுடன் இந்தியா தனது முயற்சிகளை மகிழ்ச்சியுடன் மேற்கொள்ளும் எனக் கூறுகிறது.

இந்தியத்தூதரக அதிகாரிக

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இந்தியாவின் முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஆகிய இருவருக்கும் இடையே காணப்பட்ட தனிப்பட்ட தொடர்பும் அதைத் தொடர்ந்து இந்திரா காந்திக்கும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனாவிற்கும் இடையே காணப்பட்ட தொடர்புமே இவ்வாறான வதந்திகளுக்கு அடிப்படை எனலாம் 1987 ஆம் ஆண்டு தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் ஜே ஆர். ஜெயவர்த்தனாவிற்கும் இடையே இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

### உறவு பேணுவதில் உறுதி

தமது வெளிநாட்டுக்கொள்கையில் இந்தியாவுடனான உறவுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும் என இலங்கையின் இரு பிரதான கட்சிகளும் தேர்தல் காலத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். நடந்து முடிந்த இலங்கையின் பொதுத்தேர்தலில் இந்தியா எதுவித செல்வாக்கையும் செலுத்தவில்லை.

இலங்கையின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கடந்த வருடம் மே மாதம் பிரதமராகப் பதவியேற்றதன் பின்னர் இந்தியாவிற்கு விஜயம் செய்தார். இலங்கை இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக ரீதியான உறவுகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை இவர் மேற்கொண்டார். படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி பிரேமதாசாவின் குறிக்கோளும் இதுவாகவே இருந்தது.

''இந்தியாவின் நண்பன்'' என வர்ணிக்கப்படும் எதிர்கட்சித் தலைவரான காமினி திசாநாயக்கா 1987-ம்ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் பற்றித் தனது தேர்தல் பிரசாரங்களின்போது குறிப்பிட்டுள்ளார். ஆட்சியில் உள்ள கட்சியும் எதிர்க்கட்சியும் இந்தியா பற்றிய சாதக

ஆம் ஆண்டு இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் என்பன முக்கியமானவை மேலும் இவ் ஒப்பந்தங்கள் யாவற்றிலும் இந்தியா சார்பாக இந்திரா காந்தியும், ராஜீவ்காந்தியும் கைச்சாத்திட்டுள்ளனர்.

அதாவது தாயும், மகனும் இரண்டு நாடுகளுக்கும் இடையேயான உறவைக் கட்டியெழுப்புவதற்கும் பாடுபட்டுள்ளனர் என்பதையே இது குறிக்கின்றது- ஆனால் ஏனைய நாடுகளில் அரசாங்கங்கள் மாறியவேளையில்இது பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தியது குறிப்பிட்ட தலைவர் ஒருவரின் தனிப்பட்ட நண்பனாகவே இந்தியா கருதப்பட்டது.

> நரசிம்மராவின் தூதுவர் வர்மா பிரதமர் சந்திரிகாவுடன் நடத்திய சந்திப்பு மூலம் இலங்கை - இந்திய உறவில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாக 'இந்து' பத்திரிகையின் செய்தியாளர் வி. ஜயந் குறிப்பிடுகிறார். இது குறித்து அவர் எழுதிய செய்திக் குறிப்பு இங்கு வெளியாகிறது.

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகித்த ராவ் இவற்றை எல்லாம் அவதானித்தார் இதற்குப் பின்னர் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை வித்தியாசமான முறையில் மாறியமைத்தார். இரு நாடுகளினது தலைவர்களுக்கிடையே தனிப்பட்ட ரீதியிலான உறவுகள் நீடிப்பது தடுக்கப்பட்டது அதற்குப் பதிலாக இராஜதந்திர மற்றும் வர்த்தக சம்பந்தமான உறவுகளைப் பலப்படுத்துவதற்கு வழி கோலப்பட்டது. இது சிறந்த முறையில் அமைந்திருப்பதைக் காணலாம்.

### ராவ் விஜயம் செய்வாரா?

ராவ் இலங்கைக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளாரா என்ற கேள்வியும் இத்தருணத்தில் எழுந்துள்ளது. அப்படியாயின் ஏன் அவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்? இதற்கு விடை பகர்

றும்வரலாற்று ரீதியிலானஉறவுகளைப் பலப்படுத்துவது இன்னமும் கடினமாக இருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இரண்டு நாடுகளும் தமக்கிடையே கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை எல்லாம் ஒரு புறத்தில் ஒதுக்கி வைத்து விட்டு ஒன்றாகச் சேர்ந்து செயற்படுவதற்கு முன்வரலாம்.

வர்த்தகம் மற்றும் தீர்வை தொடர்பான பொது உடன்படிக்கை (காற்) மனித உரிமைகள் போன்ற விடயங்களில் தோன்றும் சவால்களை எதிர்கொள்வதற்கு நம்பிக்கைக்குரிய நண்பர்கள் இந்தியாவிற்கு தேவைப்படுகின்றது, காஷ்மீர் விவகாரத்தைச் சர்வதேச விவகாரமாக மாற்றுவதற்கும் பாகிஸ்தான் முயற்சிசெய்கின்றது. அணுவாயுதப் பிரச்சினையும் பிராந்திய மற்றும் சர்வதேசமட்டங்களில்பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

இதே வேளை ''சார்க்'' அமைப்பில் ஏற்பட்டுள்ள சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தனது நீண்ட காலநண்பர்களான பூட்டான், நேபாளம் ஆகியனவற்றையே இந்தியா நம்பி இருக்கின்றது இப்பட்டியலில் இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளையும் சேர்த்துக் கொள்வதில் இந்தியா அக்கறை காட்டிவருகின்றது

பங்களாதேஷையும்இவ்வாறு சேர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி வெற்றி அடைந்ததா அல்லது இல்லையா என்பது பற்றி தெரியவில்லை ஆனால் இந்தியாவிற்கு பரந்த மட்டத்தில் ஒத்துழைப்பு வழங்குவதற்கு இலங்கை ஆயத்தமாகவுள்ளது.

யுடன் கொண்டிருந்த முக்கியமான பிரச்சினையாகக் காணாமல் போன மீனவர்கள் தொடர்பான விடயம் கருதப்படுகின்றது இவ் விடயம் பற்றி கடந்த மாதங்களுக்கு முன்னர் ஆராயப்பட்டதுடன் பாக்கு நீரிணையில் இது போன்ற சம்பவங்கள் எதுவும் அண்மையில் நிகழவில்லை எனத் தெரிய வருகின்றது.

### பாதுகாப்பு முட்டுக் கட்டை

இந்தியா அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் சார்க் அமைப்பின் தலைமைத்துவத்தை ஏற்கவிருக்கிறது. பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் இந்தியா சினேகபூர்வமான உறவுகளை மேம்படுத்த வேண்டும். இலங்கையில் புதிய பிரதமர் விரைவில் இந்தியாவிற்கு விஜயம் செய்தால் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவைப் பலப்படுத்தலாம் அதேபோன்று இந்தியாவின் உயர்மட்ட அதிகாரிகளும் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டும் ஆனாலும் இதற்கு பாதுகாப்பு காரணங்கள் பெரும் தடையாக இருப்பதைக் காணமுடிகின்றது

இலங்கையில் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அரசாங்கம் இந்தியாவைத் தவிர சீனா, யப்பான், பிரான்ஸ் பிரிட்டன் ஆகிய நாடுகளுடனான உறவுகளையும் பலப்படுத்த திட்டமிட்டுள்ளது இலங்கையில் தேயிலை, தைக்கப்பட்ட ஆடைகள் என்பனவற்றை அமெரிக்காவிற்கு பெருமளவில் ஏற்றுமதி செய்கின்றது. மற்றும் மனித உரிமைகள் சம்பந்தமான விடயத்தில் புதிய அரசாங்கம் தலையிடுவதை ஏனைய மேற்கு நாடுகள் வரவேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வர்மா தூதுக் குழுவினரின் இலங்கை விஜயமானது இரு நாடுகளுக்கும் இடையேயான

கின்றன. அதிலும் குறிப்பாக, யுத்த நிறுத்தம் செய்தல் இன்றைய நிலைகளில் இருந்து பின்வாங்குதல் என்பவற்றிற்கு இராணுவம் ஒத்துழைப்பு வழங்க முடியாது என தெளிவாகக் கூறிவிட்டதாகவே அறிய முடிகின்றது.

இவ்வாறானதொரு சூழ் நிலையிலேயே இனப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கான பல முயற்சிகளை மேற்கொள்வதாக அறிவித்து வரும் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கவோ, அன்றி பிரதிப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான கேணல் அனுருத்த ரத்வத்தவோ யுத்த நிறுத்தம், இன்றைய நிலையில் இருந்து படைகள் பின் வாங்குதல் ஆகிய தொடர்பாக எதையும் வெளிப்படையாகப் இதுவரை பேசவில்லை எனக் கூறலாம்.

ஆனால், யுத்த நிறுத்தம், இன்றைய நிலைகளில் இருந்து பின்வாங்குதல் ஆகியவற்றுக்கு உடன்படாது விட்டாலும், பாரிய தாக்குதல் ஒன்றிற்கு இராணுவம் திட்டமிட்டதானது அரசாங்கத்தின் அரசியற் தீர்வு என்பதற்கு இராணுவத்தரப்பில் பலத்த எதிர்ப்பு உள்ளது என்பதை வெளிக்காட்டுவதாகவே உள்ளது. அதாவது இராணுவம் அரசியற் தீர்விற்கு ஒத்துழைப்பு நல்காது விட்டாலும் பரவாய் இல்லை, அரசியற் தீர்விற்கான முயற்சிகளையும் அது குழப்பத்திற்கு உள்ளாக்கலாம் என்பதே அதன் நடவடிக்கைகள் காட்டுவதாக உள்ளன.

இந்நிலை தொடருமானால் அரசாங்கம் மேற்கொள்ளும் அரசியற் தீர்வுக்கான முயற்சிகள் எதிர்காலத்தில் எந்தளவிற்கு வெற்றியளிக்கும் என்பது கேள்விக்குரியதே ஆகையினால், இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதற்கு முற்படும் அரசாங்கம் முதலில் யுத்த நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும்.

அவ்வாறு ஒரு யுத்த நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்யப்படாத விடத்து, இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வுஏற்படாது என்பது மட்டுமல்ல, அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்தே தமிழ் மக்களுக்குச் சந்தேகங்கள் எழலாம். அதாவது அரசாங்கம் ஒருபுறம் அரசியற் தீர்வு என்று கூறிக்கொண்டு மறுபுறம் யுத்தத்தை நடத்துவதாகவும் குற்றம் சுமத்தப்படலாம்.

இந்நிலையில், இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு காண்பதற்கும், இம் முயற்சி மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைப்பதற்கும் யுத்த நிறுத்தம் அவசியமானதாகும். அவ்வாறு யுத்த நிறுத்தத்தை அரசாங்கத்தால் அமுல் படுத்த முடியாது போனால், எதிர் காலத்தில் அரசியற் தீர்வு ஒன்றை எவ்வாறு இவர்களால் அமுல் படுத்த முடியும். யுத்த நிறுத்தத்திற்கே உடன்படாத இராணுவம் பின்னர் அரசாங்கத்தின் கீழ் கட்டுப்பட்டு செயலாற்றும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? மறுவளமாக யுத்த நிறுத்தம் ஒன்றிற்குச் சந்திரிகா அரசாங்கம் முற்படாவிட்டால் அவர்களும் முன்னைய சிங்களத் தலைவர்கள் போன்று தமிழ் மக்களை ஏமாற்ற முற்படுவதாகவே கருத வாய்ப்பேற்பட்டு விடும்.

---

ளது. அத்துடன் இருகட்சிகளில் எக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அக்கட்சியுடன் இந்தியா தனது முயற்சிகளை மகிழ்ச்சியுடன் மேற்கொள்ளும் எனக் கூறுகிறது.

இந்தியத் தூதரக அதிகாரிகளின் உதவியுடனேயே பொது ஜன ஐக்கிய முன்னணி முக்கிய தீர்மானங்களை எடுத்தது என்ற செய்தியும் பரவியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களும் பொது ஜன ஐக்கிய முன்னணித் தலைவர்களும் இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவருடன் அடிக்கடி தொடர்பு கொண்டனர்.

இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார விடயங்களில் இந்தியா முக்கிய பங்கு வகிப்பதற்கு விரும்புவதாக வெளிநாடுகள் கருதுகின்றன.

மேலும் இலங்கையின் முன்னாள் பிரதமர் திருமதி

...1987-ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் பற்றித் தனது தேர்தல் பிரசாரங்களின்போது குறிப்பிட்டுள்ளார். ஆட்சியில் உள்ள கட்சியும் எதிர்க்கட்சியும் இந்தியா பற்றிய சாதகமான கொள்கையையே விரும்புகின்றன. அவ்வாறு இருக்கையில் இவ்விடயம் தொடர்பாக எவ்வாறு அவநம்பிக்கை கொள்ள முடியும்?

## இந்தியாவின் நடவடிக்கை

இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்காக இந்தியா பல முயற்சிகளை செய்துள்ளது. அவற்றுள் இந்தியப் பிரஜைகளை தாய் நாட்டிற்குத் திருப்பி அனுப்புவது தொடர்பான 1964, 1974 ஒப்பந்தங்கள் கச்சதீவு சம்பந்தமான உடன்படிக்கை 1987

ராவ் இலங்கைக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளாரா என்ற கேள்வியும் இத்தருணத்தில் எழுந்துள்ளது. அப்படியாயின் ஏன் அவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்? இதற்கு விடை பகர்வது கடினம் ஆனால் ஏனைய நாடுகளுடன் போல இலங்கையுடனும் தனது உறவுகளைப் பலப்படுத்துவதற்கு இந்தியா விரும்புகின்றது. என்பது திண்ணம் அத்துடன் இதற்கான அறிகுறிகளும் தெளிவாகத் தென்படுகின்றன இதற்கு மேல் வேறு எவற்றை அயல் நாடான இந்தியாவிடமிருந்து புதியபிரதமர் பெற்றுக் கொள்ளலாம்.

## வர்த்தக உறவு

ஒரு நாட்டின் வெளிநாட்டுக்குக் கொள்கையில் அரசியலை விட வர்த்தகமே அதிகளவு செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. பிராந்திய மற்

...மேற்கொள்ளப்பட்ட முயற்சி வெற்றி அடைந்ததா அல்லது இல்லையா என்பது பற்றி தெரியவில்லை ஆனால் இந்தியாவிற்கு பரந்த மட்டத்தில் ஒத்துழைப்பு வழங்குவதற்கு இலங்கை ஆயத்தமாகவுள்ளது.

## வர்மாவின் விஜயம்

வர்மாவின் இலங்கை விஜயமும் இதற்குச் சாதகமாக அமைகின்றது இலங்கையின் வெகுசன தொடர்பு சாதனங்கள் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளன. மேலும் இலங்கையில் உள்ள மேற்கு நாட்டுத் தூதுக்குழுக்களுக்கு இவ் விடயம் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

கடந்த இரண்டு வருடங்களில் இந்தியா இலங்கை

வதை ஏனைய மேற்கு நாடுகள் வரவேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வர்மா தூதுக் குழுவினரின் இலங்கை விஜயமானது இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளில் புதியதொரு அத்தியாயத்தை உருவாக்கியுள்ளது. மேலும் முயற்சிகளில் தலையிட்டுக் குழப்பத்தை உண்டுபண்ணுவதற்கான காரணம் எதுவும் கிடையாது வெளித்தலையீடுகள் இருக்கத்தான் செய்யும் இந்தியா தனது பங்கை நிலைநாட்டுவதில் முந்திக் கொண்டது அதற்குப் பதிலாக புதிய பிரதமர் சாதகமான பதிலை அனுப்பி வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**பள்ளிக்குடா**

போதைய முகவரி; மடு அகதி முகாம்)

- ★ கப்டன் குமுதன் (தங்கவேலு தேவராஜா, மட்டக்களப்பு)
- ★ கப்டன் புனிதராஜ் (இரட்ணசிங்கம் தயாபரன், மட்டக்களப்பு)
- ★ கப்டன் முத்துக் குமரன் (அந்தோனி கின்சிலி, பரப்பாங்கண்டல் உயிலங்குளம் மன்னார்)
- ★ 2வது லெப் ஞானமூர்த்தி (கறுப்பையா வேலுசாமி, அடம்பன் மன்னார்)
- ★ 2வது லெப்.ராஜ்மோகன் (இராமமூர்த்தி யோகரட்ணம், காரைநகர் யாழ். தற்போதைய முகவரி: செல்லமுத்து முகாம் மானிப்பாய்)

ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

இம் மோதலில் மூன்று சிறிலங்கா இராணுவத்தினர் பலியாகியதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

**யாழ்**

ந்ததென அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து அவர் தான் ஒரு வருடத்திற்கு முன்னர் இரத்த தானம் செய்ததாகவும் அப்போது தனது குருதி ''பி'' குறூப்பைச் சேர்ந்தது என தமக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் கூறி முடிவை ஏற்க மறுத்துவிட்டார்.

இதனைத் தொடர்ந்து அவர் யாழ் போதனா வைத்தியசாலையில் குருதிப் பரிசோதனையை மேற்கொண்ட போது இவரின் குருதி ''பி'' குறூப்பைச் சேர்ந்தது என தெரிவிக்கப்பட்டது இதனால் குழப்பமடைந்த அவர் வேறொரு இடத்தில் குருதிப் பரிசோதனையை மேற்கொண்ட போது அங்கு ''பி'' குறூப்பைச் சேர்ந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் இவரின் இரத்தம் ''பி'' குறூப்பைச் சேர்ந்தது என முடிவெடுக்கப்பட்டது.

(நி. தி)

**கப்பலில்**

அரசாங்க உத்தரவு பெறாத முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் மூலம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. [நி] (தி)

**ஜனாதிபதி**

தாகவும் இதன் வேட்பாளராக சோமவன்ச அமரசிங்க போட்டியிடக்கூடிய சந்தர்ப்பங்களே அதிகமாக இருப்பதாக அப்பத்திரிகை மேலும் தெரித்தது.

**ஆசிரியர்**

படவுள்ளன எனவும்:

புதிய தேசியப் பாடசாலைகள் அமைக்கப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

**சட்டபூர்வ**

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடனேயே தொலைபேசிகளை ஒட்டுக்கேட்க முடியும் எனவே தற்போது பாதுகாப்பு அமைச்சராகவிருக்கும் ஜனாதிபதிக்கு இவ்விடயம் சுட்டிக் காட்டப்பட்டுகிறது என மேலும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று வருடகாலமாக தேசிய புலனாய்வுத் துறை இந்நடவடிக்கையில் ஈடுபட்டு அறிக்கைகள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டு வந்துள்ளது எனவும் இது ஒரு விரும்பத்தகாத செயல் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இருதரப்பு**

கைகள், பௌத்த குருமார், அரசியல் வாதிகள், ஜனாதிபதி எனப் பலதரப்பட்டவர்களின் நடவடிக்கைகளும் முழுச் சிங்களவர் மீது தவறான பார்வைக்கோணத்தை தமிழர்களுக்கு தந்தன

சமாதான நடவடிக்கைகள் தோற்றுவிக்கப்படும் காலத்தில், யுத்தத்தை விரிவு படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மறைமுகமாக மேற்கொள்ளப்படலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளதாகவும் ஜயதேவ உயங்கொட தெரிவித்துள்ளார்.

**கலாகேசரி**

சிற்பாசாரியான இவர் இருபதுக்கும் மேற்பட்ட சித்திரத் தேர்களை உருவாக்கியவர் என்பதும், 'யாழ்ப்பாணத்து பிற்கால சுவரோவியங்கள்', 'கலாயோகி ஆனந்தகுமாரசாமி' போன்ற நூல்களின் ஆசிரியரான இவர் மேலும் பல நூல்களையும் எழுதியுள்ளார்.

இவர் திருநெல்வேலி சிற்பாசாரியார் ஆறுமுகம் அவர்களின் புதல்வனும், சிற்பகலாநிதி ஆ. சபாரத்தினத்தின் சகோதரருமாவார்.

**அடுத்த**

குமாரணதுங்க பதில் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்'' எனத் தெரிவித்தார்.

மேலும் அனுருத்த ரத்வத்த தகவல் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுக்கான பிரதமரின் கடிதம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அனுப்பப்பட்டுள்ளது என கூறியுள்ளார்.

வடபகுதிக்கு விரைவில் மின்விநியோகம் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பூர்வாங்க பேச்சுவார்த்தையில் பங்குபற்றவென புலிகளின் தரப்பில் பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறு புலிகளுக்கு அக்கடிதத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளது என அனுருத்த ரத்வத்த மேலும் கூறினார்.

**சமாதான**

இடையூறாக இருக்கலாம்.

யுத்தத்தினால் பாதிக்கப்படாத அரசியல்வாதிகளும் இனவாதிகளும், சமாதானத்தின் உண்மையான தேவையை உணரவில்லை போல்படுகின்றது எனவும் பி. பி. சியின் சிங்கள சேவை தெரிவித்துள்ளது.

# பள்ளிக்குடா மோதலில் வீரச்சாவடைந்தோர்



கப்டன் மௌனதேவன்



கப்டன் குமுதன்



கப்டன் புனிதராஜ்



கப்டன் முத்துக்குமரன்



2-ம் லெப். ஞானமூர்த்தி



2-ம் லெப். ராஜ்மோகன்

# எதிர்க்கட்சிகள் போராட்டம் இருநூறுக்கும் மேற்பட்டோர் பலி

## பங்களாதேஷில் சம்பவம்

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் எதிர்கட்சியினர் நடத்திய முற்றுகை போராட்டத்தில் இடம்பெற்ற கல் வீச்சு சம்பவத்தில் பல பொலிசார் உட்பட இருநூறுக்கும் அதிகமானோர் பலியாகி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கலகத்தில் ஈடுபட்டவர்கள் கண்மூடித்தனமாக கல்வீச்சுகளிலும், குண்டு வீச்சுகளிலும் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. அவாமிலீக், மற்றும் ஜமாயித்தே இஸ்லாமி கட்சிகளின் தொண்டர்கள் மீது பொலிசார் கண்ணீர் புகை குண்டுகளையும் ரப்பர் தோட்டாக்களையும் சரமாரியாக தீர்த்தனர். நகரத்தின் அனைத்து நுழைவாயில்களும் பொலிசாரால் பலமான தடை போடப்பட்டதுடன் அலுவலகங்கள் மற்றும் சடைகள் என்பனவும் மூடப்பட்டிருந்தன. தெருக்கள் வெறிச் சோடிப்போய்க் கிடந்தன.

நடுநிலை கொண்ட பராமராமரிப்பு அரசு நிறுவப்பட வேண்டும். புதிய அரசை தேர்ந்தெடுக்க தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பவையே எதிர்க்கட்சிகளின் முக்கிய கோரிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.

### பேச்சுவார்த்தை

பேச்சுக்கு உதவ முன்வர வேண்டும் என்றும் அவ்வாறு இல்லாத நிலையில் யுத்தம் மூலம் தீர்வு தவிர்க்க முடியாததாக அமைந்துவிடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளதாக 'லங்கா தீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

### ஊழியர்

டதைத் தொடர்ந்து இவ் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதாக மேலும் கூறப்படுகிறது.

### தட்டிவான்

யமடைந்தார். இவர் வீதியால் சென்றுகொண்டிருந்த வேளையில் பின்புறமாக வந்த தட்டிவானின் சில்லு கழன்ற நிலையில் ஒருபக்கம் இழுத்துக்கொண்டு இவரையும் அடித்து விழுத்தியது. இவர் காலில் படுகாயமடைந்த நிலையில் உடன் யாழ் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார். மேற்படி வான் பின்பும் வேறு ஓர் இடத்தில் சில்லுக்கழன்று வெளிக் காணிக்குள் புகுந்ததாகவும் தெரிய வருகின்றது (86)

## கண்ணீர் அஞ்சலி

### இளையவன் அருட்செல்வன்

[கல்வி உத்தியோகஸ்தர் வலி கிழக்கு (வ ப) ப. நோ. கூ. சங்கம் அச்சுவேலி]

மலர்வு: 10-01-1959 உதிர்வு: 10-09-1994

கூட்டுறவில் எம்மோடு
கூடிநின்று சேவை செய்து
நாட்டமுடன் இட்ட பணி
நாணாது தான் செய்து

அன்பாகப் பேசி பண்பாகப் பழகிய நாட்களை நாம் மறப்பதெப்படி. அன்னாரின் அகால மரணத்தால் துயருற்றிருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள், பெற்றோர், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வலி. கிழ. (வ. ப) ப. கூ. நோ. சங்கம் அச்சுவேலி. பணிப்பாளர்களும், பணியாளர்களும்

(9372)

## மாட்டுவண்டி சவாரி பிற்போடப்பட்டுள்ளது

ஆவரங்கால் விவசாயிகளால் இன்று 11-9-94) நடாத்தப்படவிருந்த மாட்டுவண்டில் சவாரிப் போட்டி மழை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

- ஆவரங்கால் விவசாயிகள்

(9368)

யாழ். ஸ்ரீதரில்

தினசரி காலை 10.30, மாலை 6.00

WAY OF THE DRAGON

[கராட்டி]

சனி, ஞாயிறு தினங்களில்
பி.ப 2 15 மணிக்கு மட்டும்

SOCCER WORLD CUP . 1994
BRAZIL VS ITALY - FINAL
உலகக்கிண்ண உதைபந்தாட்டம் - 1994
பிறேசில் எதிர் - இத்தாலி இறுதி ஆட்டம்

தினசரி மாலை 4-00 மணிக்கு மட்டும்

CIRCUS

இதனுடன்

BIG BOSS படத்திலிருந்து புறூஸ்லீயின் குங்ஃபூ சண்டைக் காட்சிகளும், RAMBO படத்திலிருந்து சில்வெஸ்டர் ஸ்டலோனின் சாகசக் காட்சிகளும் காண்பிக்கப்படும்.

ஃ பாடசாலையூடாக மாணவர்கள் தொடர்புகொண்டால் காட்சிநேர கட்டண சலுகைகள் வழங்கப்படும்.

(சி-10230)

வெலிங்டன் சந்திக்கருகில்!

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி காசிப்பிள்ளை

[புத்தூர் - சிறுப்பிட்டி]

சின்னத்தம்பி காசிப்பிள்ளை இயற்கை எய்திவிட்டார். இவர் காலம் சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், செந்திவேல் (பொதுவுடமைவாதி - பத்திரிகையாளர் - எழுத்தாளர்), கெங்காதேவி (ஆனைக்கோட்டை). கதிர்காமு (பிரான்ஸ்) லீலாவதி, பரமேஸ்வரி (சுதுமலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும்; செல்வராணி, திருநாவுக்கரசு (கொழும்பு). ஈஸ்வரி (பிரான்ஸ்), சிவபாலன் (டோகா) ஆகியோரின் அன்பு மாமனாரும்; நந்தமோகன், செல்வகௌரி. மணியதாஸ், கமலவதனி. கமலரஞ்சினி (பிரான்ஸ்) கமலநந்தினி நடேஸ்வரன், மகேஸ்வரன், கமலேஸ்வரன், கலைச்செல்வி, தமிழாலினி (பிரான்ஸ்) சர்மிளா (பிரான்ஸ்) கார்த்தீபன் (பிரான்ஸ்) ஜீவானந்தம் ஜீவகன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்

அன்னாருக்கான இறுதி அஞ்சலி நிகழ்ச்சி இன்று ஞாயிறு 11-09-94 பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று புத்தூர் மேற்கு கிந்தசிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

'தாயகம்'
பருத்தித்துறை வீதி,
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
சி. கா. செந்திவேல்
(மகன்)

(9361)

## கலாகேசரி ஆ. தம்பித்துரை

(இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளரும் இயக்குனர் கலாகேசரி கலாலயம்)

திருநெல்வேலியை பிறப்பிடமாயும், குரும்பசிட்டியை வதிவிடமாயும் கொண்ட இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளரும், கலாகேசரி கலாலய இயக்குனருமாகிய கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை 9-9-1994 வெள்ளியன்று இந்தியாவில் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இந்தியாவில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தற்காலிக முகவரி,
தம்பிகுமாரர் வீதி,
சுன்னாகம்.

தகவல்:
வெ. தேவசீலன்
(மருமகன்)

(9371)

## சுப்பிரமணியம் நல்லதம்பி

(நல்லராசா மாஸ்ரர்)

சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் நல்லதம்பி (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்கள் 9-9-94 அன்று சிவபதமடைந்தார். இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும், ரதி (ஆசிரியை ஆறுமுக வித்தியாலயம், சுழிபுரம்), காலஞ்சென்ற மதி, தேவி, இராசதிலகம், சுப்பிரமணியம், டாக்டர் சந்திரமதி (அம்பிகை மெடிக்கல் வட்டக்கச்சி), சிவபதி (ஆசிரியை இராமநாதன் இந்துக் கல்லூரி கொழும்பு), கலாராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நடராசா (முதன்மை ஆசிரியர் சங்கானை கல்விக்கோட்டம்), ஆறுமுகம் (T. A. நீர்ப்பாசன இலாகா, வவுனியா), நல்லையா (T. A நீர்ப்பாசன இலாகா யாழ்ப்பாணம்), டாக்டர் ஜெயராசா (அம்பிகை மெடிக்கல் வட்டக்கச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். பாக்கியம் தங்கம்மா காலஞ்சென்றவர்களான மாணிக்

ஞானமூர்த்தி    ராஜ்மோகன்

06-09-94 அன்று மன்னார் பள்ளிக்குடாவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் ஆறு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## சிற்றூர்தி

லைக்கட்டுவன் ரூபா10, யாழ் அளவெட்டி ரூபா 15, யாழ்-தெல்லிப்பழைரூபா12, யாழ்-சாவகச்சேரி ரூபா 15, யாழ்-பளை ரூபா 33, யாழ்-மூளாய் ரூபா 15, யாழ்-தாளையடி ரூபா 50, யாழ்-கிளாலி ரூபா 75, சாவகச்சேரி-மருதனார் மடம் ரூபா 20, பருத்தித்துறை-கொடிகாமம் ரூபா 22, பருத்தித்துறை-தாளையடி ரூபா 35.

## அரசியல்

தாக அக்கிளையின் தலைவர் கலாநிதி சுகத் மத்திம பண்டார தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் உயர் அதிகாரிகள் மற்றும் பொலிசார் மீது நடிவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் இது ஓர் பயங்கரமான சூழ்நிலையை தோற்றுவிக்கும் என்றும் எனவே இதற்கு எதிராக தாம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.


வட இலங்கை தொழில் நுட்ப கல்லூரியின்

**கணனி - இலத்திரனியல் மனையியல்**

**கண்காட்சி**

**இன்று (11-9-94)**

நடைபெறும்.

பார்வையாளருக்கு விசேட புலமைப் பரிசில்கள் காத்திருக்கின்றன.

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, ST. PETER'S LANE
JAFFNA.

(சி-10320)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது





வெலிங்டன் சந்திக்கருகில்!

தனது 9 வருட அனுபவத்தில்!!

கணனித் துறைக்கெனத் தனித்து இயங்கும்!!!

**UNKCO**

***COMPUTER CENTRE***

புதிய பிரிவுகளை ஆரம்பிக்கின்றது!!!!

| COURSE | FEES | DURATION |
|---|---|---|
| BASIC | 1750/- | 4 months |
| PASCAL | 1750/- | 4 months |
| CLIPPER | 3000/- | 4 months |
| TURBO C | 3000/- | 4 months |
| WORDSTAR Rel 5 5 | 2500/- | 3 months |
| dBASE III PLUS | 2500/- | 3 months |
| LOTUS 1-2-3 | 2500/- | 2 months |

Join With Us To Study The Latest Computer Technology

★ தவணைமுறையில் கட்டணங்கள்

★ தமிழில் விளக்கங்கள்

★ கூடிய நேர செய்முறைப்பயிற்சி

★ வார இறுதி வகுப்புகள் ஆரம்பம்: 17-9-94

★ வார நாள் வகுப்புகள் ஆரம்பம்: 16-9-94

மேலதிக விபரங்கட்கு:

37, CLOCK TOWER ROAD
***JAFFNA***

(சி-10319)


கச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். பாக்கியம் தங்கம்மா காலஞ்சென்றவர்களான மாணிக்கம், மாரிமுத்து, சின்னத்தங்கச்சி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாளினி, சரவணபவன், நாகரூபன், நிஷாந்தினி, தமயந்தி, காந்தரூபன், காந்தகுமாரன், ஜெகமதி, மதி, சுஜாந்தினி, அயிலன், துஷியந்தி, ஜெயமதி, காந்தகௌரி, ஜெயமாருதி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

(9369)

## கலாகேசரி
## ஆறுமுகம் தம்பித்துரை

(சிற்பக் கலைஞர்)

பிரபல சிற்பக்கலைஞரும் ஒய்வுபெற்ற சித்திரவித்தியாதிபதியுமாகிய கலாகேசரி ஆறுமுகம் தம்பித்துரை (ஆச்சாரியார்) அவர்கள் 9-9-94 வெள்ளிக்கிழமை அன்று இந்தியாவில் காலமானார். அன்னார் யாழ். திருநெல்வேலி காலஞ்சென்றவர்களான பிரபல சிற்பாசாரியார் வி. ஆறுமுகம் பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற தவமணிதேவியின் அன்புக்கணவரும் Dr. தவவதனியின்(பேராதனை பல்கலைக்கழகம்), அன்பு தகப்பனாரும், திருமதி வைரமுத்து நாகரத்தினம், ஸ்தபதி ஜீவரட்ணம் (ஆச்சாரியார்), கந்தசாமி, இராசதுரை (பிரான்ஸ்). துரைராசா, மகாலிங்கம் (ஜேர்மனி), சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ந வைரமுத்து, தவமணி, சிந்தாதேவி, ராஜேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சாரதா, ராஜேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற செல்வராணி, தங்கமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், இரத்தினகுமார் (லண்டன்), புனிதவதி (கனடா), கௌசல்யா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயப்பிரகாஷ், ஜெயவாணி, ஜெகதீஸ், கோகுலவாணி, ரமேஷ் ரதீஸ், சதீஸ், தினேஷ், ராஜேந்திரகுமார், சுரேஷ்குமார், ராதிகா, ராதா, விஜிதா, றதீபன் சஜிதா, சசிகாந்தன், சிவகுமார், சசிகலா, சிவசங்கர், சிவறஞ்சினி, சிவராஜ், சிவப்பிரபா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இந்தியாவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

திருநெல்வேலியில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

தகவல்; ஸ்தபதி ஆறுமுகம் ஜீவரட்ணம் (ஆச்சாரியார்)
சகோதரர் (9370)

ஆறுமுகம் சிற்பாலயம்,
திருநெல்வேலி.